Reg. No. M. 2324.　　　　தனிப்பிரதி ரூ. 0 3 0

கலா நிலயம்

வியாழன்தோறும் வெளிவரும்

வாரப் பத்திரிகை.

வருஷ சந்தா
இந்தியா, பர்மா, ஸிலோன் ரூ. 7 8 0
புற நாடு … … ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வெள்ளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 1.]　　1928ளு செப்டம்பர் மீ 6வ　　[No. 36.

OFFICE OF THE REGISTRAR OF … MADRAS
No.
20 NOV 1928

பொருளடக்கம்.

		பக்கம்.
1.	தலையங்கம் (Leader)	701
2.	சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் T. P. மீனாக்ஷிசுந்தரன் M. A., B. L.	703
3.	தமிழ்ப் பாடம்	705
4.	தேவாரமும் ஐந்திணையும் E.N. தணிகாசலமுதலியார் B.A.,B.L.	707
5.	இராமனும், இலக்குமணனும் T. M. கலியாணராமய்யர்	710
6.	கார்திமதி (A Novel) T. N. சேஷாசலம் B. A., B. L.	711
7.	அகப்பொருள் வரலாறு K. இராமரத்நம் ஐயர் B. A.	713
8.	கம்பராமாயணம் T. N. சேஷாசலம் B. A ,B. L.	715
9.	வர்த்தமானம்	719

கலா நிலயம்.

விதி விலக்குக்களின் பயன்.

மாந்தராயினோர் அனைவரும் ஓரே காலத்தில் இருவேறு வாழ்வு வாழ்ந்து வருகின்றன ரென்பதைச் சிலர் அறிந்திருக்கமாட்டார்; ஆதலின் அவை இரண்டும் இன்னவென ஆராய்ந்து ஒன்றினிற்கொன்று கொண்டுள்ள உறவைச் சிறிதளவு விளக்கிவைத்தல் நம்மையே நாம் தெரிந்து கொள்ளப் பயன் படும்.

நாம் உலகத்திலே கலந்து விவகரிக்கின்ற வெளிவாழ்வு ஒன்று. இந்த வெளிவாழ்விலே நாம் பேசுகின்ற சொற்களையும் செய்கின்ற கருமங்களையும் கண்டு கேட்டு அவைகளை ஆதாரமாகக் கொண்டு நம்மை மற்றவர் மதிக்கின்றனர். நான்முகன் நமக்கு வகுத்துள்ள நாட்களுள் பெரும்பாகம் இவ்வெளிவாழ்விற்றான்கழிகின்றது. பரபரப்பும் பகட்டுமாயப் போக்கு வரவு யாவும் இவ்வாழ்விற்கே உரியன. நாம் பேசும் வார்த்தைகளாலும் செய்யும் கருமங்களாலும் நமது எண்ணம் இன்னபடி யிருக்கின்றதென்று பிறரால் ஊகிக்க இயலுமேயன்றி, அதனை நேராக அவர் நிச்சயமாக இதுதான் என்று தெரிந்து கொள்ள இயலாது. ஏனெனில், நினைப்பதொன்றும் சொல்வது வேறாகவும், சொல்வதொன்றும் செய்வது வேறாகவும் இவ்வெளி வாழ்வில் முடிவதை நாடோறும் கண்டு வருகின்றோம்.

பிறரை மதிப்பதும் பிறரால் மதிக்கப்படுவதுமாகிய இந்த வெளிவாழ்விற்கு எதிராக நம்மிடத்தில் இன்னொரு வாழ்வு இருக்கின்றது. அதனை உள்வாழ்வென இங்குப் பேரிட்டழைப்போம். இவ்வுள்வாழ்வு ஒருபோதும் முன்வந்து விவகரிப்பதில்லை. நமதகத்தின் பின்புறமே அது வீற்றிருக்கின்ற இடம். அங்கே இருந்துகொண்டு, வெளிவாழ்வு சம்பந்தமாக நாம் கொள்கின்ற ஒவ்வொரு எண்ணத்தையும் சொல்கின்ற வொவ்வொரு வார்த்தையையும் புரிகின்ற வொவ்வொரு செயலையும் ஓரம் சாராமல் சீர்தூக்கி அவ்வெண்ணமும் சொல்லும் செயலும் உண்மையில் நல்லதோ கெட்டதோவென்றும், முறையோ அன்றோவென்றும், தக்கதோ அல்லதோவென்றும் இரக்கமின்றி இழுக்குமின்றி அது நமக்குக் கூறிக்கொண்டிருக்கின்றது. வெளிவாழ்விற்கு இயன்றனவாய் நம் மனோவாக்குக் காயங்களால் பிறக்கின்றவைகளைப் பற்றி மற்றவர் எவ்வாறு மதிக்கின்றனரென்பதேனும், அல்லது நாமே என்ன நினைக்க முயல்கின்றதென்பதேனும் துலாக்கோலும் கையுமாய் உண்ணின்று மதிக்கும் இவ்வாழ்விற்கு ஒரு பொருளல்ல.

இவ்விதமாக நமக்குள்ளிருந்து நம்மையே மதிப்பது மல்லாமல் ஓயாமல் இடித்துரைத்துக்கொண்டு வரும் அவ்வுள்வாழ்வானது நமது வெளிவாழ்விற்கு வேண்டிய வேடக் கூத்திற் கிணங்காதபோதெல்லாம் அதனை நாம் அலக்ஷியம் செய்து அப்புறம் தள்ளிவிடுவதாகப் பாவிக்கின்றோம். அதுவோ நாம் செய்யும் அலக்ஷியத்தை ஏற்றுக்கொள்வது போல் தோன்றினாலும் எளிதில் அடங்கிவிடுவ

தில்லை. மீண்டும் மீண்டும் அது வந்து தலைகாட்டும் போதெல்லாம் அதனை வாயில் வந்தபடி வைய ஆரம்பிக்கின்றோம். அதுவோ பதிற்சொல்வதில்லை, சும்மா இருந்து விடுகின்றது. அதன் மவுனமே, நாம் பேசிய வசையெல்லாம் ஏசிய அவதூறு என்று நம்மை உணரும்படி செய்கின்றது. இதன் பின், நமது காலமெல்லாம் கழிப்பதற்கு ஏற்றதாயும் நம்மை மற்றவர்களோடு கலக்கவைப்பதாயும் இருக்கின்ற வெளி வாழ்க்கையிலேயே நம் கவனம் முழுவதையும் செலுத்தி 'இதுதான் வாழ்வு, இதுவன்றி வேறொன்றும் பொருளில்லை' என்று நம்மை நாமே தேற்றிக் கொள்ளத் தலைப்படலாம். ஆனால் என்! உள்ளிருந்து நிகழ்கின்ற வாழ்வோ நம் இருதயத்தை அரித்தவண்ணமாயிருக்கின்றது. வாயில்லை அதற்கு எனினும் நாவன்மை நன்குளது. நாமதை அடித்து அடித்து எவ்வளவு அழுத்தினும் விடா முயற்சியுடைய அது, நாம் பொய் வாழ்க்கை புகுந்துளோமென்றும், வெளி வாழ்வு தவிர வேறொன்றும் பொருளில்லை என்று நமக்கே நிச்சயமில்லாதவொன்றை நடித்து வருகின்றோமென்றும், சொல்லிக் கொள்கின்ற அத்தனையளவு சந்தோஷம் இவ்வெளி வாழ்க்கையால் நாம் பெற்றதில்லையென்றும், மனம்போனபடி போகின்றோமேயன்றி மெய்நலம் இருக்கும் வழி நாடுகின்றதில்லையென்றும் எள்ளளவும் சங்கையற நமக்கு உணர்த்தி வைக்காமல் அமைவதில்லை. பிறரை வஞ்சிக்கலாம், நம்மையே நாம் வெளியே வாழ்ந்து விவகரிக்கும் இவ்வாழ்வுதான் வாழ்வு என்று நெடுநாள் வஞ்சித்துவர இயலாது. சேவித்தும் சென்றிரந்தும் பாவித்தும் பாராண்டும் போக்குகின்ற இவ்வாழ்வுதவிர வேறு நமக்கு உரிய தொன்றுமில்லை என்று நாம் ஒரு நாளும் ஹிருதய பூர்வமாய் மோசம் போகின்றவர்களல்லர். அது நமக்கு நன்றாகத் தெரியும்.

தெரியுமெனின் ஏனிவ் வெளிவாழ்க்கையில் கட்டுண்டு அழிகின்றோம்! "தன் நெஞ்சு அறிவது பொய்யற்க, பொய்த்தபின் தன் நெஞ்சே தன்னைச் சுடும்" என்பன போன்ற மெய்யுரைகள் இல்லாததாலோ! மற்று இருப்பனவற்றை ஓதாததாலோ! முன்னிங்கு நாம் வகுக்க முயன்ற தவ்வளவையும் தெய்வத் திருவள்ளுவனார் சிறிய சில சொற்களில் தொகுத்துத் தெளிவும் ஆழமும் தலைசிறக்கச் செப்பியுள இக்குறளைக் கற்றிருக்கின்ற மாந்தர் எண்ணிறந்தோர். கல்லாத காலையும் அதனைக் கொண்டாடுபவர் பின்னும் பலர். வெளி வாழ்க்கை என்பதற்கு எதிராக யாம் கூறிய உள்வாழ்க்கை என்பதும் ஆன்மவாழ்க்கை என்பதும் ஒன்று. 'வாய்மை' என்ற அதிகாரத்தில் இக்குறள் வந்தாலும், அவ்வாய்மை என்பதற்கு இவ்வதிகாரத்தில் 'பொய் சொல்லாமை' என்னும் குறுகிய பொருளே உரையாசிரியர்கள் கொண்டபடி பொருந்துமானாலும், 'வெளிவாழ்க்கையே முழு வாழ்க்கையும் அல்லவென்று வேறு நிற்கும் ஆன்ம வாழ்க்கை அறிந்திருக்க, அதை வஞ்சித்து அப்பால் செல்ல நினையற்க' என்னும் இதுவும் அதன் உட்கருத்தாகுமோவெனச் சிந்திப்பதற்கும் இடமுளது. வெளிவாழ்க்கை தன்னைப் பிரித்தழலும் சுயவாழ்க்கை. ஆன்மவாழ்க்கையோ பிரபஞ்ச வாழ்க்கை. "உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்". மெய்யே பேசுகின்றவனை எல்லாரும் போற்றி எப்பொழுதும் நினைத்திருப்பர், என்னும் பொருள் இக்குறளுக்கு அதிகாரத்தளவில் போதுமாயினும் அதனின் உள்ளக்கிடக்கையும் ஆன்மவாழ்க்கையின் அலகிலா வியாபகத்தைக் குறிப்பதாம்

முதலில் நாம் சொல்லிவந்த பாகுபாடு வாழ்க்கையில் இருப்பதை அறியாதவர் சிலர். அவர்களுக்கும், வாய்விட்டு இன்னபடி என்று முறையாக விளக்கிச்சொல்ல இயலாதென்பதேயன்றி, உள்ளூற ஆன்மவாழ்க்கையின் நிழலேனும் ஒருபோதல்லாக்கால் ஒருபோதாதல் நினைவைக் கதுவித்தானிருக்கும். மற்றுப் பின் நாம் சொல்லிய குறள்களையும் அவைபோன்ற அறிவுகனிந்த மொழிகளையும் ஓதியிராதார் சிலர். சிறுபகுதியாகிய இவ்விருதிறத்தோர் போக மற்றுள பெரும் பகுதியோர், தன்னெறி பிறழ்ந்து ஒழுகுந்தோறும் சுட்டுநிற்கின்ற ஆன்ம வாழ்விற்கு அஞ்சி நடக்கின்றனர் என்பதற்கில்லையே. உடலைச்சுட்ட தீயை மீண்டுந் தீண்டுதற்கு அஞ்சுகின்றோமாயினும் நெஞ்சு சுடு தீக்கு அஞ்சுவதில்லை. அஞ்சுவதில்லை யெனினும் முற்றிலும் அஞ்சாதாருமில்லை. அஞ்சுவதும் அஞ்சாததும் அவரவர் மனநிலைக்கு ஏற்ற பெற்றி அமைகின்றது. ஆன்ம வாழ்க்கையின் நெறிக்குச் சிறிதேனும் புறஞ்செலச் சிலர் அஞ்சுகின்றனர். சிலர் அதனின்று அறவே விலகுதற்கே அஞ்சுகின்றனர்.

இந்தவிதம் அச்சத்தினளவு மனிதருக்கு மனிதர் வேறுபடுவதற்குக் காரணம் அவரவர் ஆன்ம வாழ்க்கை தனக்கு இலக்ஷியமாகக் கொண்டுள நோக்கத்தின் தன்மையே ஆகும். வாழ்வின் பயன் இன்னதென்று ஆன்மா தெளிவுற உணர்ந்திராதாயின், 'சூடுண்ட பூனை நெருப்பண்டை போகாது' என்பது போன்ற வெளிவாழ்க்கையில் அவ்வப்போது அடைந்த அநுபவ அறிவேகொண்டு விவகரிக்க நேர்கின்றது. இத்தகைய விதிகளும் விலக்குக்களும் அந்தவந்த சமயத்திற்கு ஏற்ற போதனைகளாகுமே யல்லாது சாச்வதமாய் என்றும் அகலாது உள்ளத்தே தங்கி ஆன்மவாழ்வை இயக்குகின்ற வன்மையன ஆகா. ஆன்மவாழ்க்கை தனக்கு இணங்கி வெளிவாழ்க்கையை நடத்தி வைக்க முயன்றுகொண்டே இருக்கும் என்று முன்னர்க் கூறினோம். ஆயின், அவ்வான்ம வாழ்க்கை தான் எவ்வாறு அமைந்திருத்தல் வேண்டுமென்பதை மயக்கமின்றித் தெள்ளிதின் உணர்ந்திருத்தல் இன்றியமையாததாகின்றது. இவ்வுணர்ச்சியும் இதனால் உளதாகும் உயரிய நோக்கமும் ஆன்மா பெற்றொளிருமாறு செய்கின்ற செவ்வி காவியங்களனைய கலைகளின் பாலே தங்கியிருக்கின்றது. காவிய நலங்களால் உயரிய நோக்கங்களின் உணர்ச்சி எய்திய ஆன்மவாழ்வு அவ்வுணர்ச்சியை ஏற்ற சொற்களாக மாற்றி வெளிவாழ்விற்கு உறஉறச் சொல்ல முயலுங்கால் இயலாமல் உழல்கின்ற காலத்தில் ஆன்றோர் அருளிய அறநூல்களும் அறிவுரைகளும் பக்கத்துணையாய் நின்று உதவக் கூடியன. நோக்கமொன்றும் இலாதார் இவைகளைக் கற்கலாம் கூறலாம், கொண்டாடலாம், பின் கற்றதும் கேட்டதும் அவலமாக நிற்கலாம். அவ்வளவே.

சேக்கிழாரும் திருக் கண்ணப்பரும்.

பொருள் ஆராய்ச்சி.

[685-ம் பக்கத் தொடர்ச்சி]

உயிர் தவழும் உடலம்.

திண்ணனார் பிறந்ததும் அவரது தந்தை வந்து குழந்தையை எடுத்து அணைத்ததைச் சேக்கிழார் புகழ்கின்றார். கரிய மலையின்மேலே காளமேகம் தவழ்வது போல விளங்கிற்று என்கின்றார். கண்டோரது கண்குளிர அருள்சார்ந்து வெயிலெரிச்சலையும் மன எரிச்சலையும் தணித்து அவர்களுக்கு அமுதமாக்கித் தரும் அருமந்த நீரைப் பொழிந்து நிற்கும் காளமேகத்தைத் திண்ணனார் நினைப்பூட்டுவது பலவகையாலும் தகுதியுடையதேயாகும். நாகனோ கருங்கற் பாறைபோலக் கறேல் என்றிருந்தான் என்று கூறுகின்றார். ஆனால் கண்ணப்பரோ ஒளிசிறந்த காளமேகம் போன்றிருந்தார் என்கின்றார். பின்னரும் 'கருமுகில் என்ன நின்ற கண்படா வில்லியார்' என்கின்றார். கருமுகிலிடத்தும் கடலிடத்தும் ஒருவகையான பளபளப்பும், உள்ளீடான ஒளியும் இருப்பது பற்றியல்லவா அவற்றைக் கண்ணபிரானுக்கு உவமைகூறி அவரது அழகை உலகோர் பாராட்டுகின்றார்கள். அவ்வழகு இல்லாமற்போனால் கருங்கற் பாறை போலத்தான் இருப்பர் என்று சேக்கிழார் வேற்றுமை காட்டி நமக்கு உண்மையை விளக்குகின்றார். கறுப்பாய் இருக்கும் குழந்தை இருளடைந்து கிடக்கவில்லை என்பதற்காக மறுமுறையும் அதனை விளக்கி "கருங்கதிர் விரிக்குமேனிக் காமரு குழவி" என்று கூறுகின்றார். அழகிய குழவி; கண்டாரது கண்ணையும் மனதையும் கவரும் குழவி; தெய்விக ஒளியொடு மின்னுங் குழவி; கதிரவனை மெல்லிய கறுப்புத்திரையால் மூடினால் அவன் எங்ஙனம் மின்னுவானோ அங்ஙனம் இருந்தது இக்குழவி. அத்துணையே கறுப்பு. அதுவும் ஒருவகையில் நல்லதாயிற்று. கதிரவனைக் கண்கொண்டு காண்பார் யார்? கண் குருடாக வேண்டுவது தான். இவ்வாறு கரும்படாம் போர்த்து ஒளிர்வதால் அல்லவா எல்லோரும் கண்டு இன்பங்கொண்டு களிப்பது இயைவதாயிற்று. கருங்கதிர் விரிக்கு மேனி யுடைமையால் காமரு குழவி யாயிற்று. இக் கருத்தையே பின்னரும் வற்புறுத்திப் "பானற்குல மாமலரில் படர் சோதியார்" என்கின்றார். கருநெய்தற் பூக்கள் உன்ளுக்குள்ளே நெருப்புப் படரப்பெற்று எரிவதுபோல ஒளியோடு திகழ்ந்தாராம் திண்ணனார். இவர் அட்டக் கறுப்பல்ல; நீல மேனியுடையார் என்று பின்னுங் கூறுகின்றார் சேக்கிழார்,

தெய்வநிகழ் குறமுதியாள் சென்ற பின்பு
    திண்ணனார் சிலைத்தாதை அழைப்பச் சீர்கொண்
மைவிரவு நறுங்குஞ்சி வாசக் கண்ணி
    மணிநீல மலையொன்று வந்த தென்னக்
கைவிரவு சிலைவேடர் போற்றவந்து
    காதல்புரி தாதைகழல் வணங்கும் போதில்
செய்வரைபோல் புயமிரண்டும் செறியப் புல்லிச் [தான்.
    செழும்புலித்தோல் இருக்கையின்முன் சேரவைத்

உயர் நிலையை அடைதற்கு வேண்டிய உடற்குறிப்புகள் எல்லாம் அக்குழவியினிடத்துப் பிறந்தபோதே காணப்பட்டன. ஒவ்வொரு உறுப்பும், ஒவ்வொருவரையும் (ரேகையும்) எங்ஙனம் இருக்கவேண்டும் என்று நூல்கள் சொல்லினவோ அங்ஙனமே அவருக்கு அமைந்திருந்தன.

கருங்கதிர் விரிக்கு மேனிக்
    காமரு குழவி தானும்
இரும்புலிப் பறழின் ஓங்கி
    இறவுளர் அளவே அன்றி
அரும்பெறல் உலகம் எல்லாம்
    அளப்பரும் பெருமை காட்டித்
தருங்குறி பலவும் சாற்றும்
    தன்மையிற் பொலிந்து தோன்ற.

"சாமுத்திரிகா லக்ஷணம்" என்று சொல்லப்பட்டவை சிறிதும் குறைவிலாது இருந்தன என்பதைப் பின்னரும் "மாசறுகோலம்" என்று விளக்குகின்றார் சேக்கிழார். அக்குழவிக்கு ஒப்பே இல்லை. சிறந்தவடிவும்; அழகியதிருவுருவம். இன்னுமென்னவேண்டும்? அவரைக் காணும்போது அறநிலையத்தில் வாழ்வதுபோல மனம் அமைதியடைகின்றது; இன்பமுறுகின்றது. கடவுள் வாடை வீசுகின்றது.

புண்ணியப் பொருளாயுள்ள பொருவில் சிறுவினன் என்கின்றார் சேக்கிழார். பின்னும் இதனையே வற்புறுத்தி

வண்ணவெஞ் சிலையு மற்றப்
    படைகளும் மலரக் கற்றுக்
கண்ணகன் சாயல் பொங்கக்
    கலைவளர் திங்க ளேபோல்
எண்ணிரண் டாண்டின் செவ்வி
    எய்தினார் எல்லை இல்லாப்
புண்ணியர் தோன்றி மேன்மேல்
    வளர்வதன் பொலிவு போல்வார்.

என்கின்றார் அத்தகைய குழந்தைக்கு வேடர்கள் பல நகைகளை அணிந்தனர். அவை அக்குழந்தைக்கு அழகு செய்வன அல்ல. போட்டவர்கள் தங்கள் கண்களுக்கு எவை எவை பிடித்தனவோ அவ்வவற்றைப் போட்டனர். ஆதலின் அவர்கள் தங்கள் கண்ணுக்குத் தான் அழகு செய்தனர். அல்லாக்கால் அழகுக்கு அழகு செய்வார் யார்? அழகு செய்வனவோ அவையும்?

வரையுறை கடவுட் காப்பு
    மறக்குடி மரபிற் றங்கள்
புரையிறொன் முறைமைக் கேற்பப்
    பொருந்துவ போற்றிச் செய்து
விரையிளந் தளிரும் சூட்டி
    வேம்பிழைத் திடையே கோத்த
வரைமணிக் கவடி கட்டி
    அழகுற வளர்க்கு நாளில்

ஆண்டெதிர் அணைந்து செல்ல
    இடுமடித் தளர்வு நீங்கிப்
பூண்டிகழ் சிறுபுன் குஞ்சிப்
    புலியுகிர்ச் சுட்டி சாத்தி
மூண்டெழு சினத்துச் செங்கண்
    மூளவுமுன் ளரிந்து கோத்த
நாண்டரும் எயிற்றுத் தாலி
    நலங்கிளர் மார்பில் தூங்க,

கண்ணினுக் கணியாத் தங்கள் கலன்பல அணிந்தார் அன்றே என்கின்றார் சேக்கிழார். இவரது திருவுருவைப் பார்த்து எல்லோரும் இன்பமுற்றனர் என்பதைக் குறிப்பால் உணர்த்துகின்றார்.

பாசொளி மணியோ டார்த்த
பன்மணிச் சதங்கை எங்கக்
காசொடு தொடுத்த காப்புக்
கலன்புனை அரைஞாண் சேர்த்தித்
தேசடை மருப்பிற் றண்டை
செறிமணிக் குதம்பை மின்ன
மாசறு கோலம் காட்டி
மறுகிடை ஆடும் நாளில்.

கோலம் காட்டி என்றமையால் கண்டவரைப் பற்றிக் கூறவேண்டுமா? அவர்கள் கண்ட நிலையைக் கம்பரோடு தோள்கண்டார் தோளே கண்டார் என்றுதான் புகழ வேண்டும். பலரும் கண்டதால் வந்த கண்ணேறு தீர வன்றோ நாள்தோறும் சாயுங்காலத்தில் வெண்கடுகுப் புகை ஆட்டுவது.

அலர்பகல் கழிந்த அந்தி
ஐயவிப் புகையும் ஆட்டிக்
குலமுதல் குறத்தி வாட்டிக்
கொன்றுகொள் குயிற்றிக் கல்குல்
புலாலைச் உணவு நல்கிப்
புரிவிலா யூட்டின் விட்டுச்
சிலமுறை ஆண்டு செல்லச்
சிலையுறில் பருவம் சேர்ந்தார்.

இவரது திருவடிகளின் மென்மையைப் பற்றிச் சேக்கிழார்முன்னரே குறித்துவைக்கின்றார்.'அடிச் சிறுதளிர்' என்று புகழ்கின்றார். மிக இளந்தளிர் எவ்வளவு மென்மையானதோ அவ்வளவு மென்மையானவை திண்ணனாரது திருவடிகள். சிறியகாயனாரது அழகிய கையினைக் கோல முன்கை என்று புகழ்வாராகின்றார். மற்றைய வேடர்களது கைபோல முருடாய்க் கறுத்துப் போயிருப்பவை அல்ல அவருடைய கைகள். சேக்கிழார் "செங்கைத் தலம்" என்று நமக்கு நினைப்பூட்டுகின்றார். கண்ணப்பரது கண்களும் கண்ணபிரானது ஒப்புயர்வில்லாத அழகு நிறைந்த கண்களைப்போன்று இயற்கையாகவே சிவந்து எழில்நிறைந்து அருள்ததும்பி எல்லோர் மனதையும் கொள்ளைகொள்வன. அத்தகைய கண்களை அல்லவா பிடுங்க முன்வந்தனர்! கடவுளது கண்ணிற்கு இணையான ஓவியாய் மூன் இறைவன்கண் இருந்ததுபோலவே இவர் கண்களும் இவர் அப்பியபோது இருந்தனவன்றோ. "இருசுடர்க் குறுகண் தீர்க்கும் எழில் வளர்கண்" என்கின்றார் சேக்கிழார். பின்னும்"வேடர் தம்கரியசெங்கண் வில்லியார்"எனப் புனைந்துரைக்கின்றார். உருவிலும் வடிவிலும் கண்ணனே கண்ணப்பர் எனலாம்.

சேக்கிழார் ஆனவர் தலைசிறந்த ஓடாவி என்றோம். கண்ணப்பநாயனாரது ஓவியம் எழுதவருவாரும், சிலையடிக்கவருவாரும், சேக்கிழார் எழுதிவைத்த படத்தை மேல் வரிச்சட்டமாக வைத்துத்தான் எழுதுகின்றனர்; உருவார்க்கின்றனர்; கல்லில் அடிக்கின்றனர். கண்ணப்பநாயனாரது படம் என்று இப்பொழுது எதனை நாம் காண்கின்றோம்.

கண்ணுதல் கண்ணில் தங்கண்
இடந்தப்பிற் காணு சேர்பா
டெண்ணுவார் தம்பி ரான்றன்
திருக்கண்ணில் இடக்கால் ஊன்றி
உன்னிறை விருப்பி னோடும்
ஒருதனிப் பகழிகொண்டு
திண்ணனார் கண்ணில் ஊன்றத்
தரித்திலர் தேவ தேவர்.

செங்கண்வெள் விடையின் பாகர்
திண்ணனார் தம்மை ஆண்ட
அங்கணர் திருக்கா ளத்தி
அற்புதர் திருக்கை அன்பர்
தங்கண்முன் இடக்கும் கையைத்
தடுக்கமுன் றடுக்கு நாக
கங்கணர் அமுத வாக்குக்
கண்ணப்ப நிற்க என்ற.

எனச் சேக்கிழார் பாடி எழுதியதைத்தானே. திண்ணனார் தமது இரண்டாவது கண்ணையும் அகழப் போகின்றார் ஆதலினால், அதனை அகழ்ந்தபின் தாம் குருடானால் எம்பெருமானது புண்ணொழுகும் கண்ணை எவ்வாறு அறிந்து அப்புவது என்று எண்ணி அந்தக் கண்ணை அறிந்து கொள்வதற்காக அந்தக்கண்ணிலே தமது இடதுகாலைத் தூக்கிவைத்துக் கொள்கின்றார். மனமகிழ்ந்து முகமலர்ச்சியோடு ஒரு அம்பினைத் தமதுகண்ணில் ஊன்றுகின்றார். விரைந்து கடவுள் இவரதுகையைப் பிடித்துக்கொள்கின்றார். இந்தப் படந்தான் கண்ணப்பர் படமென எங்கும் உலவி வருகின்றது. த்யான ஸ்வரூபம் எனும் வழிபடும் வடிவினை நமக்கு எழுதித்தந்த பெருமை சேக்கிழாருக்கு உண்டு. இந்நிலையில் கடவுளது அன்பும் கண்ணப்பரது அன்பும் இருவரும் ஒன்றான உண்மையும், கடவுள் நிடுக்கிட்டுப் பதைபதைப்பதும், கண்ணப்பர் கண்ணை அகழ்ந்தபோதும் உவகைபூத்து நிற்பதும் இவை எல்லாம் இப்படத்தில் வெளியாகின்றன. கதை முழுதினையும் அதன் உட்கருத்தினையும் சுருக்கமாக இப்படத்தில் சேக்கிழார் காட்டி விடுகின்றார்.

அந்த நிலையிலே கண்ணப்பர் அணிந்திருந்தவற்றையும் சொன்னாலல்லவா வழி பாட்டு வடிவம் குறைவிலாதிருக்கும்? அவற்றையும் சேக்கிழாரே புனைந்துரைக்கின்றார். பின்னே வந்த ஓவியக் காரர்களுக்கு ஒன்றும் விடவில்லை. 'இவற்றை எல்லாம் எங்குச் சொல்லி இருக்கின்றார் சேக்கிழார்? சிறிது முன் சென்று பார்க்க வேண்டும். பெறுதற்கரிய பெரும் பேறு பெற்று நின்ற உயரிய அன்பு நிலையிலே நின்று கண்ணப்பும்போது அவர் கட்டியிருந்ததையும் பூண்டிருந்ததையும் புனைந்துரைத்தால் சேக்கிழாரோடு உயரப் பறந்து சென்ற நமது மனம் மறுபடியும் பொத்தெனச் சிறு மீனைக் கண்டு கொத்தவரும் பருந்துபோலக் கீழே பாயும். நமது மனத்தை அவ்வாறு ஆட்டி யலைக்காதபடி முன்னரே கண்ணப்பரது ஒப்பனையைக் கூறி விடுகின்றார். கன்னி வேட்டைக்குக் கண்ணப்பர் புறப்பட்டபோது என்ன ஒப்பனையோடு வந்தாரோ அந்த ஒப்பனையோடு தானே இன்றும் விளங்குகின்றார்? ஆகவே பட்டம் கட்டிக் கொண்டு வேட்டைக்குப் புறப்பட்ட இடத்திலேயே இவ்வொப்பனையை அழகுபட விரித்துரைக்கின்றார் சேக்கிழார். இவ்வொப் பனையானது கல்லாடர் கூறிப்போனதற்குப் பெரிதும் ஒப்புமையுடையதெனலாம். ஆனால் அதில் ஒரு அகப்பை முகந்துகொண்டார் என்று சொல்லலாமே யன்றி அதுவே இது என்று சொல்ல முடியாது. இவரது புனைந்துரையின் கைப்பாகம் வேறு செய்பாகம் வேறு;, சுவையும்வேறு, மணமும் வேறு.

T. P. மீனுக்ஷிசுந்தரன்.

தமிழ்ப் பாடம் 36.

நள வெண்பா

(687-வது பக்கத் தொடர்ச்சி)

கலிதொடர் காண்டம்.

மக்களின் துயரிற்கு ஆற்றாது, நளன் "நீ குழந்தைகளை அழைத்துக் கொண்டு உன் தந்தையிடம்போய் இரு" என்று தமயந்திக்குச்சொல்ல அவள் "என்ன வந்தாலும் உன்னைவிட்டுப் பிரியமாட்டேன்" என்று நளனையும் தன்னோடு வந்துவிட வேண்டுவதை இனி வரும் ஆறு செய்யுள்கள் கூறுகின்றன.

காதலிருவரையுங் கொண்டு கடுஞ்சுரம் போக்
கேத முடைத்திவரைக் கொண்டுநீ—மாதராய்
வீமன் றிருநகர்க்கே மீளென்றான் விண்ணவர்முன்
தாமம் புனைவாளைத் தான். 63

குற்றமில் காட்சிக் குதலைவாய் மைந்தரையும்
பெற்றக் கொளலாம் பெறலாமோ—கொற்றவனே
கோக்கா தலனைக் குலமகளுக் கென்றுரைத்தாள்
நோக்கான் மழைபொழியா நொந்து 64

கைதவந்தா னீங்கிக் கருத்திற் கறையகற்றிச்
செய்தவந்தா னெத்தனையுஞ் செய்தாலும்—மைதீர்
மகப்பெறு மானிடர்கள் வானவர்த மூர்க்குப்
புகப்பெறார் மாதராய் போந்து. 65.

பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்
றென்னுடைய ரேனு முடையரோ—இன்னடிசில்
புக்களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
மக்களையிங் கில்லா தவர். 66.

சொன்ன கலையின் றுறையனைத்துந் தோய்ந்தாலும்
என்னபய னுடைத்தா மின்முகத்து—முன்னம்
குறுகுதலைக் கிண்கிணிக்காற் கோமக்கள் பால்வாய்ச்
சிறுகுதலை கேளாச் செவி. 67

போற்றரிய செல்வம் புனலுட் டொடும்போகத்
தோற்றமையும் யாவர்க்குந் தோற்றாதே—ஆற்றலாய்
எம்பதிக்கே போந்தருளு கென்றா ளெழிற்கமலச்
செம்பதிக்கே வீற்றிருந்த தேன். 68

இன்னவாறு தன்னுடைய நகரிற்குச் சென்று வீமனோடு வைகலாம் என்ற தமயந்தி அழைக்க நளன் பின்னிரண்டு பாசுரங்களால் அவ்வாறு செய்தல் இழிவென்று மறுக்கின்றான்:—

சினக்கதிர்வேற் கண்மடவாய் செல்வர்பாற் சென்றீ
எனக்கென்னு மிம்மாற்றங் கண்டாய்—தனக்குரிய
தானந் துடைத்துத் தருமத்தை வேர்பறித்து
மானந் துடைப்பதோர் வாள். 69

பதப்பிரிவு:—சினம் கதிர் வேல் கண் மடவாய் செல்வர்பால் சென்று ஈ எனக்கு என்னும் இ மாற்றம் கண்டாய் தனக்கு உரிய தானம் துடைத்து தருமத்தை வேர் பறித்து மானம் துடைப்பது ஓர் வாள்.

பதவுரை.

சினம் - கோபத்தோடு
கதிர் - பிரகாசிக்கின்ற
வேல் - வேலைப்போன்ற
கண் - கண்களையுடைய
மடவாய் - மாதே,
செல்வர்பால் - செல்வமுடையவர்களிடத்தில்
சென்று - போய்
'எனக்கு - எனக்கு
ஈ - (ஒன்றைக்)கொடு'
என்னும் - என்று யாசிக்கின்ற
இ - இந்த
மாற்றம் - வார்த்தையானது,
தனக்கு - ஒருவனுக்கு
உரிய - பொருந்திய
தானம் - நிலையை
துடைத்து - அழித்து
தருமத்தை - (அவனுக்குரிய) தர்மங்களை
வேர் - வேரோடு
பறித்து - பிடுங்கி யெறிந்து
மானம் - அவனது மானத்தையும்
துடைப்பது - அழித்துவிடுவதாகிய
ஓர் - ஒரு (நூதனமான)
வாள் - வாளிற்குச் சமானமாம்.
கண்டாய் - தெரியுமா!

விரிவுரை:—என்ன நேர்ந்தபோதிலும் ஏற்பது இகழ்ச்சி என்னும் முறைமையைக் கடைபிடித்து நளன் இவ்வாறு மறுக்கின்றான். விதர்ப்ப நாட்டிற்கு இவன் சென்றால், "எனக்கும் என் மனைவி மக்களுக்கும் நீ சோறும் துணியும் கொடுத்துக் காப்பாற்றியருள்க" என்று தன் மாதுலனாகிய வீமராஜனை இரப்பதுதானே யாகும். அதுசெய்ய இவ்வுத்தமனிற்கு மனம் வரவில்லை. மற்றொருவனிடம் சென்று ஒருதரம் ஒன்றை யாசிக்க நினைத்துவிட்டால் பிறகு தன்னிடத்தில் எவ்வித நற்குணமும் தருமமும் நில்லாது அகன்று விடுமென்பது நிச்சயமான கொள்கை. எவனும் யாரிடத்திலும் எதற்காகவும் எந்த நிலையிலும் இரக்கப்படாது என்பதை வற்புறுத்துகின்ற

'ஆவிற்கு நீரென் றிரப்பினு நாவிற்
கிரவி னிளிவந்த தில்.'

என்னும்திருக்குறளின்கருத்து மிகவும் மேன்மையானது. கேட்பது தனக்காகவல்ல, ஒருபசுவிற்கு. அதுவும் விலையுள்ள பொருளல்ல, வெறும் நீரே. அப்படியிருந்தாலும், "நீரின்றிச் சாகும் எனக் கிடக்கின்ற இப்பசுவிற்கு நீயே உன் முயற்சியால் நீர் கொணர்ந்து வைத்தால் வை. இந்தப் பசுவிற்கு வைக்கச் சிறிது நீர் தருமின் என்று யாரையும் போய்க் கேட்காதே. கேட்பாயாயின் உன் நாவிற்கு அதனிலும் இழிவானது வேறொன்றும் இல்லை" என்பார் மெய்த்திறம் விளக்கவந்த வள்ளுவநாயனார். ஆயின், கோயில் திருப்பணிக்கென்றும் பொதுஜன நன்மைக்கென்றும் ஏழைகளுக்கு உதவவென்றும் ஊரூராய்ச் சென்று பொருள் இரந்து வருகின்றவர்களின் செயல் திருவள்ளுவரின் விதிப்படி தக்கதென்று சொல்ல இயலாது.

குறிப்பு:—தருமத்தை, என்பது பெயர்ச்சொல். இது இரண்டாம் வேற்றுமை. இது முதல்வேற்றுமையாயிருக்குமானால் தருமம் என்று நிற்கும். இந்தத் தருமம் என்றதோடு ஐ என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு சேர்ந்து வந்திருக்கிறபடியால், இரண்டாம் வேற்றுமை விரி. தருமம்+ஐ என்னும் இரண்டும் சேர்ந்தால் 'தரு

மமை' என்றுதானே வரவேண்டும், அப்படிக்கில்லாமல் தருமத்தை என்று வந்திருக்கிறதே என்று திகைக்கவேண்டா. சிலசமயங்களில் ஒரு வார்த்தையுடையும் அதனோடு வேற்றுமை உருபையும் சேர்த்துவைக்கச் சில எழுத்துக்கள் வரும். அப்படி வருபவைகளுக்குச் சாரியை என்று பெயர். தருமத்தை,என்ற சொல்லில் அத்து என்ற எழுத்துக்கள் சாரியையாக வந்திருக்கின்றன. தருமம்+அத்து+ஐ=தருமத்தை என்றாயிற்று.மகரமெய்யாகிய ம் என்னும் எழுத்தில் முடிகின்ற வார்த்தைகளோடு வேற்றுமை உருபுகள் சேரும்போது இந்த அத்து என்னும் சாரியை பெரும்பான்மை வந்தே தீரும். மரம், சிரம், கரம், பலம், நலம், அகலம் என்பனபோன்று, ம் என்னும் எழுத்தில் முடிகிற எந்த வார்த்தையையாவது எடுத்துக்கொண்டு அதனோடு வேற்றுமை உருபைச்சேர்த்துப் பாருங்கள். இதுவரையில் நாம் கற்றிருக்கிற இரண்டாம் வேற்றுமை உருபு ஆகிய ஐ யைச்சேர்த்தால், மரமை சிரமை, கரமை, பலமை, நலமை, அகலமை என்று எங்கேயாவது வழங்குவதுண்டா? அத்து, என்னும் சாரியை இடையிலே வருவித்துத்தான் சாதாரணமாய் அந்த ஐ என்னும் உருபை, ம் என்னும் எழுத்தில் முடிகிற வார்த்தைகளோடு சேர்த்து வைக்கவேண்டும். ஆகையால் அவை, மாத்தை, சிரத்தை,கரத்தை,பலத்தை,நலத்தை, அகலத்தை என்றுதான் வரும்.

அத்து என்பதுபோல், இன் உ என்பவைகளும் சாரியைகள். இவைகளல்லாமல் இன்னும் சில சாரியைகளும் தமிழிலிருக்கின்றன. அவைகளை அங்கங்கு வரும்போது பார்ப்போம். இச்சாரியைகள் எல்லாம் இடைச்சொற்கள். வேற்றுமை உருபுகளும் இடைச்சொற்களே.

மானம் துடைப்பது, என்றதில் மானம் என்பதும் இரண்டாம் வேற்றுமையில்தான் இருக்கின்றது. ஐ, உருபு இல்லை என்பது உண்மையே. ஆனால் 'மானத்தைத் துடைப்பது'என்பதுதான் அதன்பொருளல்லவா. ஆகையால் இது இரண்டாம் வேற்றுமைத்தொகை.

மன்னவராய் மன்னர் தமையடைந்து வாழ்வெய்தி
இன்னமுதந் தேக்கி யிருப்பரேல்—சொன்ன
பெரும்பே டிகளலரேற் பித்தரே யன்றே
அரும்பேடை மானே யவர். 70.

என்றிப்படி தமயந்தியும் நளனைவிட்டுப் பிரியவும் நளன் அவனோடு விதர்ப்பநகர் செல்லவும் இசையாமல் இருந்த நிலையில் தமயந்தி,"ஆனால் நம் மக்களைமாத்திரம் என் தாதைபால் அனுப்பிவிடலாமே" என்று கீழ்வரும் பாசுரத்தில் கூறுகின்றாள்.

செங்கோலா யுன்றன் றிருவுள்ள மீதாயின்
எங்கோன் விதர்ப்ப னெழினகர்க்கே—நங்கோலக்
காதலரைப் போக்கி யருளென்றாள் காதலருக்
கேதிலரைப் போல வெடுத்து. 71.

நளனும் அதற்குச் சம்மதித்தானேனும் பெருந்துயரத்தால் கண்களில் நீர்தளும்ப அங்கிருந்தவோர் அந்தணனை நோக்கி 'இம்மக்களை அழைத்துப்போய்த் தமயந்தியின் தந்தைக்குக் காட்டு'என்று சொல்லியதை அடுத்த செய்யுள் கூறுகின்றது.

பேதை பிரியப் பிரியாத பேரன்பின்
காதலரைக் கொண்டுபோய்க் காதலிதன்—தாதைக்
காட்டு நீயென்றான் கலங்காத வுள்ளத்தை [குக்
வாட்டுநீர் கண்ணிலே வைத்து. 72.

இச்சொற்களைக் கேட்டுக்கொண்டிருந்த அம்மக்கள் பிர்வதற் காற்றாமல் அழுகின்றனர்.

தந்தை திருமுகத்தை நோக்கித் தமைப்பயந்தாள்
இந்து முகத்தை யெதிர்நோக்கி—எந்தம்மை
வேறாகப் போக்குதிரோ வென்றார் விழிவழியே
ஆறாகக் கண்ணீ ரழுது. 73.

பதப்பிரிவு:—தந்தை திரு முகத்தை நோக்கி தமை பயந்தாள் இந்து முகத்தை எதிர் நோக்கி எம்தம்மை வேறு ஆக போக்குதிரோ என்றார் விழி வழியே ஆறு ஆக கண்நீர் அழுது.

அன்வயம்:—தந்தை திருமுகத்தை நோக்கித் தமைப் பயந்தாள் இந்து முகத்தை எதிர்நோக்கி, விழிவழியே கண் நீர் ஆறாக அழுது, "எம்தம்மை வேறு ஆகப் போக்குதிரோ" என்றார்.

பதவுரை.

தந்தை - மக்களிருவரும், தம் தந்தையினுடைய
திரு - அழகிய
முகத்தை - முகத்தை
நோக்கி - பார்த்து
தமை - தங்களை
பயந்தாள் - பெற்றவளினுடைய
இந்து - சந்திரன் போன்ற
முகத்தை - முகத்தை
எதிர் - எதிராக
நோக்கி - பார்த்து
விழி - தம்கண்களின்
வழியே - வழியாக
கண்நீர் - கண்ணீரை
ஆறு ஆக - ஆறுபோல
அழுது - அழுது
"எம்தம்மை - எங்களை
வேறு ஆக - வேறு இடம்போக
போக்குதிரோ - அனுப்பி விடுகின்றீர்களோ!"
என்றார் - என்றார்.

விரிவுரை :—முன், 'வழியானதெல்லாம் கடந்தோமோ?" என்று கேட்டதுபோலவே, இங்கும் இம்மக்கள் தம் பெற்றோர் இருவருடைய முகத்தையும் நோக்கியே கேட்கின்றனர்.

குறிப்பு :—(1) பயந்தாள், என்பது வினையாலணையும் பெயர். பயந்தவளினுடைய என்றாகும்.

(2) முகத்தை, என்பது இரண்டாம் வேற்றுமைப் பெயர்ச்சொல்—விரி. அத்துச்சாரியை பெற்றிருக்கின்றது.

(3) போக்குதிரோ, என்பதிலுள்ள ஓகார இடைச்சொல் வினாவுடன் இரக்கப் பொருளிலும் வந்திருக்கின்றது.

அஞ்சனந்தோய் கண்ணி லருவிநீ ராங்கவர்க்கு
மஞ்சனநீ ராக வழிந்தோட—நெஞ்சுருகி
வல்லிவிடா மெல்லிடையாள் மக்களைத்தன் மார்
புல்லிவிடா நின்றாள் புலர்ந்து. [போடும் 74.

பதப்பிரிவு:—அஞ்சனம் தோய் கண்ணில் அருவி நீர் ஆங்கு அவர்க்கு மஞ்சன நீர் ஆக வழிந்து ஓட நெஞ்சு உருகி வல்லி விடா மெல் இடையாள் மக்களை தன் மார் போடும் புல்லி விடா நின்றாள் புலர்ந்து.

அன்வயம்:—வல்லிவிடா மெல் இடையாள், மக்களைத் தன் மார்போடும் புல்லி நெஞ்சு உருகி புலர்ந்து, அஞ்சனம் தோய் கண்ணில் அருவி நீர் ஆங்கு அவர்க்கு மஞ்சனம் நீர் ஆக வழிந்து ஓட விடா நின்றாள்.

பதவுரை.

வல்லி - பூங்கொடியின் தன்மையை
விடா - ஒருபோதும் நீங்காத

மெல் - மெல்லிய
இடையாள் - இடையை உடைய தமயந்தி,
மக்களை - மக்களை
தன் - தன்னுடைய
மார்போடும் - மார்பினோடு
புல்லி - அணைத்துக்கொண்டு
நெஞ்சு - மனம்
உருகி - உருகி
புலர்ந்து - வாட்டம் எய்தி,
அஞ்சனம் - மை ஆனது
தோய் - தோய்ந்திருக்கின்ற
கண்ணில் - கண்களிலிருந்து
அருவி - அருவிபோல் வழிகின்ற
நீர் - நீரானது
ஆங்கு - அங்கே
அவர்க்கு - அம்மக்களுக்கு
மஞ்சனம் - குளிக்கின்ற
நீர் - ஜலம்
ஆக - ஆகும்படி
வழிந்து - வழிந்து
ஓட-ஓடிக்கொண்டிருக்க
விடா - விட்டு
நின்றாள் - நின்றாள்.

விரிவுரை :—மக்களைவிட்டுப் பிரியத் தரியாளாகிய தமயந்தி குழந்தைகளைத் தன் மார்புற அணைத்துக் கண்ணெனும் கலசநீர் ஆட்டினாள், என்பது இச்செய்யுளின் கருத்து.

குறிப்பு :—(1) வல்லி விடா மெல்லிடையாள், என்பதிலுள்ள விடா என்பது விடாத என்று இருத்தல் வேண்டும். ஆதலால் அது பெயரெச்சம். ஆனால், த என்னும் கடை எழுத்து இல்லாமல் கெட்டுப்போய் விடா என்று நிற்பதால், இது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் (51-வது பக்கம்).

(2) புல்லி விடா நின்றாள், என்றதில் உள்ள விடா என்பது விட்டு, என்னும் பொருளில் வந்திருக்கின்ற உடன்பாட்டு வினையெச்சம். இந்த உருவத்திலேயே விடாமல், என்று எதிர்மறைப் பொருளிலும் அது வினையெச்சமாக வருவதும் கூடும். ஆனால் இங்குக் "கண்ணீர் வழிந்து ஓடவிடா நின்றாள்," என்றதால் ஓடவிட்டு நின்றாள் என்னும் பொருளே பொருந்தும்.

ஒரேசொல் ஒரே உருவத்தில் பெயரெச்சமாகவும் வினையெச்சமாகவும் வினைமுற்றாகவும் வரக்கூடுமென்றும்; வினைஎச்சமாக இருக்கும்போது உடன்பாடு எதிர்மறை என்னும் இரண்டு பொருள்களையும் ஏற்கக் கூடுமென்றும் முன் (51-வது பக்கத்தில்) விளக்கியிருப்பதை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்.

தேவாரமும் ஐந்திணையும்.

(693-வது பக்கத் தொடர்ச்சி)

2 திணைகளின் மூவகைப் பொருள்.

V. ஊர் :—ஊர் என்னும் பெயர் மருதநிலமக்கள் வாழும் இல்லங்களின் சேர்க்கைக்கே சிறப்புப் பெயராய் வழங்கியது. ஆகையால் ஊர் என்று மொழிந்தால் வயலை யடுத்துள்ள தென்றே எண்ணவேண்டும்.

சேறுபட்ட தண்வயற் சென்றுசென்று சேணுலா
வாறுபட்ட நுண்டுறை யானைக்காவி லண்ணலார்
நீறுபட்ட மேனியார் நிகரில்பாத மேத்துவார்
வேறுபட்ட சிந்தையார் விண்ணிபெண்ண வல்லரே?
—சம்பந்தர்.

(உ-ம்) செம்மென்சடை யவைதாழ்வுற
மடவார் மனைதோறும்
பெய்ம்மின்பலி யெனநின்றிசை
பகர்வா ரவரிடமாம்
உம்மென்றெழு மருவித்திரள்
வரைபற்றிட வுரைமேல்
விம்மும்பொழில் கெழுவும்வயல்
விரிநீர் வியலூரே —சம்பந்தர்.

எனவே, ஒவ்வொரு திணைக்கும் உரிய மனிதர்களின் வாசஸ்தலங்கள் எவ்வாறு பகரப்பட்டன வென்பதைக் காண்போம் :—

(i) குறிஞ்சி :—இந்நிலத்திலுள்ள ஊர்களைச் சிறுகுடி யென்றும், குறிச்சியென்றும் ஆன்றோர் மொழிவர். இந்நிலத்தில் உள்ள வீடுகள் சிறு குடிசைகளாயிருக்கும். மாளிகைகளாய் மேல்மாடி பெற்றிரா. இதில் மகளிர் வெளியில் உலாவுதலன்றிக் கட்டட பாகங்களில் உலாவ வசதியிரா :—

அங்கமோ ராறுடை வேள்வி யானவருமறை நான்கும்
பங்கமில் பாடலோ டாடல் பாணி பயின்ற படிறர்
சங்கம தார்குற மாதர் தங்கையின் மைந்தர்க டாவிக்
கங்குலில் மாமதி பற்றும் கற்குடி மாமலை யாரே.

கடிதென வந்த கரிதனை யுரித்து
வவ்வுரி மேனிமேற் போர்ப்பர்
பிடியன நடையாள் பெய்வளை
மடந்தை பிறைநுத லவளொடு முடனுய்க்
கொடிதெனக்கதறும் குரைகடல்
சூழ்ந்து கொள்ளமுனித் திலஞ்சுமந்து
குடிதனை நெருக்கிப் பெருக்கமாய்த்
தோன்று கோணமாமலை யமர்ந்தாரே.
—சம்பந்தர்.

(ii) முல்லை—இத்திணையிலுள்ள மாந்தர் வசிக்குமிடத்தைச் சேரி, பாடி, பள்ளி என்பர் இலக்கணப் புலவர். ஆயினும் நாளடைவில் பற்பல சேரிகள், பாடிகள், பள்ளிகள் பெரிய ஊர்களாயும் நகரங்களாயும் மாறின. திருத்தெளிச்சேரி பெரிய நகரமாய்ச் சம்பந்தர் காலத்தில் விளங்கியது :—

கொத்தி ரைத்தம லர்க்குழ லான்குயில் கோலஞ்சேர்
சித்தி ரக்கொடி மாளிகை சூழ்தெளிச் சேரியீர்
வித்த கப்படை வல்லவரக்கன் விறற்றலை
பத்தி ரட்டிக்க ரசெரித் திட்டதும் பாதமே.
சம்பந்தர்—திருத்தெளிச்சேரி 8.

பள்ளியென்பது சம்பந்தர் காலத்தில் சமணச்சேரியாயிருந்தது:—

ஒள்ளி மெய்யென தொழுதெழ
வுலகினி லுரைசெயு மொழிபல
சொள்ளி யகல வினர்குண்டி
கையவர் தவம றிவிலார்
பள்ளி யைமெய் யெனக்கரு
தன்மின் பரிவொடு பேணுவீர்
வெள்ளி பிறைய ணிசடை யினர்வள
நகர்வி ளமரே.
திருவிளமர்—திருவிராகம் 10.

கழியருகு பள்ளியிட மாகவடு
மீன்கள்கவர் வாரும்
வழியருகு சாரெயி னின்றடிசி
லுள்கிவரு வாரும்
பழியருகி னொழிக பான்மையொடு
நின்றுதொழு தேத்தும்
அழியருவி தோய்ந்தபெரு
மானுறைவ தவளிவணல் லூரே.

சம்பந்தர்.

“பள்ளி” என்னும்பேர் பல நகரங்கள் பெற்றன. அவை முன்னொரு காலத்தில் முல்லைநிலமாயதில் ஒரு குப்பமாயிருந்தன வென்று நாம் அனுமானிக்கலாம். திருக்காட்டுப்பள்ளி, திருச்செம்பொன் பள்ளி, திருச்சிராப்பள்ளி முதலியனவும் ஒரு காலத்தில் இத்தகையனவென் றெண்ணலாம். பாடி யென்னும் நாமம் வகித்த பல வூர்களுள. அவற்றுள் திருவாப்பாடி யென்பது ஆயர்பாடி என்பதின் மருவு என்றும் சிலர் எண்ணுகின்றனர். முல்லைக்கருத்தைக் குறிக்கும் சண்டேஸ்வர நாயனர் சரித்திரத்தையும் திருநாவுக்கரசு நாயனர் அடியிற் குறித்த பாசுரத்தில் “மடலவழ் கொன்றைசூடி மன்னுமா பாடியா”ரைப் பாடலானர் :—

அண்டமா ரமரர்கோமா னுதியெம் மண்ணல் பாதம்
கொண்டவன் குறிப்பி னாலே கூப்பினன் ரூப ரத்தைக்
கண்டவன் றாதை பாய்வான் காலற வெறியக் கண்டு
சண்டியார்க் கருள்கள் செய்த தலைவராப் பாடி யாரே.

—திருவாப்பாடி-திருநேரிசை 4.

(iii) பாலை:—எயினர், மறவர், வழிபறித்தலே தொழிலாய்ப் பூண்டு பாவம்செய்ய அஞ்சாநெஞ்சினர் தங்கும் பாழான வூர் பறந்தலை யெனப்படும். இத்தகைய நிலத்தில் நமது சமயாசாரியர்கள் கால்வைத் திருப்பாரென்பது நாம் கனவிலும் எண்ணலாகாது. ஆகையால் பறந்தலையைப்பற்றி தேவாரத்தில் யாதும் வெளிப்படையாய்க் காணப்படவில்லை. ஆயினும் தேவாரத்தில் திருக்கோடிக் குழகர் என்னும் திருப்பதிகத்தை நாம் வாசிக்கும்போது முற்றும் பாலைத் திணையாய்க் காணப்படுகின்றது. அதிலுள்ள அகச்சான்றுகளை நோக்குமிடத்து, அவ்வூர், சுந்தரமூர்த்தி நாயனர் காலத்தில் பறந்தலையென்று அநுமானித்தல் குற்றமாகாது :—

செடியா ணுடுகான் மூகனும் மறிவொண்ணுப்
படியான் பலிகொள்ளு மிடங் குடியில்லை
கொடியார் பலர் வேடர்கள் வாழுங் கரைமேல்
அடிகே ளன்பதா யிடங்கொண் டாயே !!

பாடேன் மிகவா லிதுகாரிகை யஞ்சக்
கூடிப் பொந்தி லாந்தைகள் கூகை குழற
வேடித் தொண்டர் சாலவுந் தீயர் சழக்கர்
கோடிக் குழகா விடங் கோயில் கொண்டாயே

—சுந்தரர்.

(iv) மருதம்—இந்நிலத்திலுள்ள வூரே உலகமெனத் தகும். “ஊராகி நின்ற உலகே போற்றி” என்று திருநாவுக்கரசு நாயனர் பாடலும் இங்கு ஞாபகத்திற்கு வருகின்றது. ஊரில் ஒன்று உதாரணமாய்த் திருப்புறவார் பனங்காட்டூர் பதிகத்தி லொன்றைக் காட்டுவோம்:—

குழலின்னிசை வண்டினின்னிசை கண்டுகுயில் கூவும்
நிழலின்னெழி ருழ்ந்தபொழில் சூழ்ந்த நின்றி யூரில்
அழலின்வல னங்கையது வேந்தியன லாடும்
கழலின்னொலி யாடும்புரி கடவுள்களை கண்ணே

—சம்பந்தர்.

வாளையும் சயலும் மிளிர்பொய்கை
வார்புனற் கரையரு கெலாம் வயற்
பாளை யொண் கமுகம்
புறவார் பனங் காட்டூர்ப்
பூளையுந் நறுங்கொன்றையும் மத
மத்தமும் புனைவாய் கழலிணைத்
தாளையே பரவுந்
தவத்தார்க் கருளாயே —சம்பந்தர்.

(v) நெய்தல்:—இந்நிலவாசிக ளிருக்குமிடம் பட்டினமெனப்படும், அல்லது பாக்க மெனப்படும். நமது ராஜதானிப் பட்டணமாகிய சென்னையும் ஒருகாலத்தில் சென்னைப்பட்டின மென்றுசொல்லப்பட்டதாம் காவிரிப்பூம்பட்டினமும் நெய்தல் நிலத்தாற் பெற்றபெயரேயாம் :—

ஏழை மாதர் கடைதொறு மிருபலிக் கென்று
கூழை வாளா வாட்டும் பிரானுறை கோயின்
மாழை யொண்கண் வளைக்கை நுளைச்சியர் வண்பூந்
தாழை வெண்மடற் கொய்துகொண்டாடு சாய்க்காடே.

—சம்பந்தர்.

வெந்தலாய வேந்தன் வேள்வி வேறச்சாடி விண்ணோர்
வந்தெலாமுன்பேண நின்றமைந்தன் மகிழ்ந்தவிடம்
மந்தலாய மல்லிகையும் புன்னைவளர் குரவின்
பந்தலாரும் பட்டினத்துப் பல்லவனீச்சரமே

—சம்பந்தர்.

VI. நீர் :—மேற்கண்ட ஐந்திணைமக்களும் எந்நீர்நிலையை ஆதாரவாகக்கொண்டு அவர் ஊணுண்டபின் பருகுவாரென்பதும் ஆராய்வோம். மலையின்பேரில் வசிப்பவர்களுக்கு ஆற்றுநீர் கிடைத்தலரிது. கிணறு தோண்டவும் பெரும்பாலும் வசதியிராது. மலைநாட்டில் ஊற்றுநீர் சில இடங்களிலேயே கிடைக்கும். ஆகையால் பொதுவில் ஒவ்வொரு திணையிலும் ஆதாரமான நீர் எது என்பதைக் காண்போம் :—

கட்டாறேகழி காவிரி பாய்புனல்
கொட்டாறே புன லூறு குரக்குக்கா
முட்டாறு வடி யேத்த முயல்பவர்க்
கிட்டாறு விடரோட வெடுக்குமே —அப்பர்.

(i) குறிஞ்சி:—இதில் அருவிகளும் சுனைகளுமே ஜலாதாரமாம் :—

தேங்கமழ் கொன்றையந் திருமார் புனைவார்
திகழ்தரு சடையிசை திங்களுஞ் சூடி
வீந்தவர் சுடலைவெண் ணீறுமெய் பூசி
வேறுமோர் சரிதையர் வேடமு முடையார்
சாந்தமு மகிலொடு முகில்பொதிர் தலம்பித்
தவழ்கன மணியொடு மிகுபளிங் கிடறி
ஏந்துவெள் ளருவிக ளெழிதிகழ் சார
லிடைச்சுர மேவிய விவர்வண மென்னே !

—சம்பந்தர்.

மானு மரையினமு மயிலினமுங் கலந்தெங்கும்
தாமே மிக மேய்ந்துதடஞ் சுனைநீர்களைப் பருகி
பூமா மாமுரிஞ்சிப் பொழிலூ டேசென்று புக்குத்
தேமாம்பொழி னீழற்றுயில் சிபர்ப்பதமலையே.

—சுந்தரர்.

(ii) முல்லை:—முல்லை நிலத்திற்குக் கான்யாறு, நீர் கொடுக்கு மென்பர். முன்னொருகாலத்தில் மாதமும்மாரி பெய்ததால் “கான்யாற்றடை யினிதரினிது” என்றூர். இக்காலத்தில் காட்டாறுகள் ஒருவருஷத்திற்குப் பத்துநாள் ஜலம்பெறும். ஆதலால் இக்கால அனுபவத்தைக் கொண்டு முன்னோர் காலவியல்பைக் கணக்கிடலாகாது. வடதிருமுல்லை வாயிலுக்குத் தெற்கில் “பாலி” என்னும் ஒருநதி (கான்யாறு) சுந்தரர் காலத்தில் ஓடியது இப்போது மறைந்தது. அதன் அடி இவ்வூரின் தெற்கில் செம்மண் நிறைந்த காட்டுப் புறம்போக்காய் அடியில் மணலாய்க் கிழக்கு மேற்கில் வெகுதூரம்காணப்படும். அவ்வாற்றின் மாட்சிமை அடியிற்கண்ட பாசுரத்தால் விளங்கும்:—

“சந்தன வேருங் காரகிற்
குறடுந் தண்மயிர் பீலியுங் கரியின்
தந்தமுந்தாளக் குவைகளும் பவளக்
கொடிகளுஞ் சுமந்து கொண்டுந்தி
வந்திழிபாலி வடகரை
முல்லை வாயிலாய் மாசிலாமணியே!
பந்தனை கெடுத்தென் படுதுயர்
களையாய் பாசுபதா ! பரஞ்சுடரே!

—சுந்தரர்.

(iii) பாலை:—பறந்தலைக்குத் தக்க நீர்நிலை. அறுநீர்க்கூவல் இத்திணையில் சலம் கிடைப்பது அரிது. கூவலில் நீர் நின்றிருப்பது மிகவும் அரியதே. இதுவேனிற்காலத்தில் உலர்ந்து போகக்கூடியது. அத்திணையில் வாழ்பவர் பிழைப்பு ஒரு பிழைப்பன்றென்பது போலும்; அதைக் கவனியாது அவர் தீத்தொழிலை நடத்துவது போல், இக்கூவலில் உள்ள ஆமையும் தன்விதியறியாது கர்விக்குமென்னும் ஒரு உருவகம் திருநாவுக்கரசு நாயனர் திருவாய் மலர்ந்தருளியதைக்காண்க:—

கூவலாமை குரைகட லாமையைக்
கூவலோடொக்கு மோகட லென்றல் போல்
பாவகாரிகள் பார்ப்பரி தென்பரால்
தேவ தேவன் சிவன்பெருந் தன்மையே.

ஆதிபுராணத் திருக்குறுந்தொகை. (4)

(iv) மருதம் :—இத்திணையில் நீர் கொடுப்பது, ஆறு, மனைக்கிணறு, பொய்கை என்னுமிம்மூன்றும்.

சற்றேயுந் தாமறி வில்சமண் சாக்கியர்
சொற்றேயும் வண்ணமென் செம்மையு டையானை
வற்றத வாவிகள் சூழ்ந்த மணஞ்சேரி
பற்றுக வாழ்பவர் மேல்வினை பற்றுவே.

—சம்பந்தர்.

ஆறுஎன்பது காவிரிபோன்ற நதிகள். மனைக்கிணறு என்பது ஒவ்வொரு வீட்டிலும் உள்ள நல்ல பாங்கமைந்த கேணி. பொய்கை, ஆறுவற்றிய காலங்களிலும் பொதுஜனங்களுக்கு ஸ்நானத்திற்குப் பயன்படும் நீர்நிலை. இதிற் பெரும்பாலும் தாமரையைக் காணலாம். தேவாரத்தில் இவை மிகவும் உன்னதமாய் விளங்கும் :—

ஒளிரிளம்பிறை சென்னிமே
லுடையக்கோவண வாடையார்
குளிரிளம்மழை தவழ்பொழிற்
கோலநீர் மல்கு காவிரி
நளிரிளம்புனல் வார்துறை
நங்கை கங்கையை நண்ணினர்
மிளிரிளம்பொறி யரவினர்
மேய துவிள நகரதே. —சம்பந்தர்.

சேவுயருந் திண்கொடியான் றிருவடியே
சரணென்று சிறந்தவன்பால்
நாவியலு மங்கையொடு நான்முகன்றன்
வழிபட்ட நலங்கொள்கோயில்
வாவிதொறும் வண்கமல முகங்காட்டச்
செங்குமுத வாய்கள்காட்டக்
காவியிருங் கருங்குவளை கருநெய்தல்
கண்காட்டுங் கழுமலமே. —சம்பந்தர்.

இண்டைமலர் கொண்டுமண லிங்கமது வியற்றி
யினத்தாவின் பாலாட்ட விடறியதா தையைத்தாள்
துண்டமிடு சண்டியடி யண்டர்தொழு தத்தத்
தொடர்ந்தவனைப் பணிகொண்ட விடங்கனதூர்
மண்டபமுங் கோபுரமு மாளிகைசூ ளிகையும் [வினவில்
மறையொலியும் விழவொலியு மறுகுநிறை வெய்திக்
கண்டவர்கண் மனங்கவரும் புண்டரிகப் பொய்கைக்
காரிகையார் குடைந்தாடும் கலய நல்லூர் காணே.

—சுந்தரர்.

(v) நெய்தல்—இந்நிலம் கடற்கரை யாதலால் உப்புநீரே பெரும்பாலும் பெற்றதாகும். ஆகையால் குடிப்பதற்கு மருத நிலத்திலுள்ள பொய்கை, கிணறு முதலியவற்றின் நீர் கொண்டும், மற்ற வேலைகளுக்கு அவ்விடத்திய உவர்நீர் கொண்டும் நெய்தல்நில வாசிகள் காலங் கழிப்பார். இந்நிலத்திய நீர் நிலைகளாவன மணற் கிணறும், உவர்க்குழியுமே யாம். இவையும் நஞ்சமயாசாரிகள் திருவாக்கில் குறிப்பிடுங் காலை, வெகு அழகாகவே காணப்படுகின்றன:—

மங்கை யங்கோர் பாகமாக
வாணிலவார் சடைமேற்
கங்கை யங்கே வாழ வைத்த
கள்வனிருந்த விடம்
பொங்கயஞ் சேர் புணரியோத
மீதுயர் பொய்கை யின்மேற்
பங்கயஞ் சேர் பட்டினத்துப்
பல்லவனீச் சரமே —சம்பந்தர்.

கவ்வைக் கடல்கதறிக் கொணர் முத்தங் கரைக் கேற்றக்
கொவ்வைத்துவர் வாயார்குடைந் தாடுந்திருச் சுழியற்
றெய்வத்தினை வழிபாடுசெய் தெழுவாரடி தொழுவார்
அவ்வத்திசைக் கரசாகு வரவாரன் பிரியானே—சுந்தரர்.

தகைமலி தண்டு சூல மனலுமிழு நாகங்
கொடுகொட்டி வீணை முரல
வகைமலி வன்றி கொன்றை மதமத்தம்
வைத்த பெருமானுகந்த நகர்தான்
புகைமலி கந்த மாலை புனைவார்கள்
பூசல் பணிவார்கள் பாடல் பெருகி
நகைமலி முத்தி லங்கு மணல்சூழ் கிடக்கை
நனிபள்ளி போலு நமர்காள் ! —சம்பந்தர்.

வற்கென்றிருத்தி கண்டாய் மனமென்னொடு
சூளறும் வைகலும்
பொற்குன்றஞ் சேர்ந்த தொர்காக்கை
பொன்னா மதுவேபுகல்
கற்குன்றுந் தூறும் கடுவெளியுங்
கடற்கானல்வாய்ப்
புற்கென்று தோன்றிடு மெம்
பெருமான் புனவாயிலே —சுந்தரர்.

E. N. தணிகாசல முதலியார்.

இராமனும், இலக்குமணனும்.

வசிட்ட முனிவரின் கட்டளைப்படி கலைக்கோட்டு முனிவரின் தலைமையின்கீழ் நடந்த புத்திர காமேட்டி யாகத்தின் பயனான அமுதபாயசத்தைத் தசரதர் தன் குலகுருவின் ஆணையால் தனது பட்டமஹிஷிகளான கோசலை, கைகேயி, சுமித்திரை ஆகிய மூவர்க்கு முறையாக வீதஞ்செய்து கொடுத்தார். அது காரணமாக அம்மூவர்க்கும் பிறந்த நான்கு புதல்வர்களும் முறையே இராமன், பரதன், இலக்குமணன், சத்துருக்கன் என்று பெயர் புனையப் பெற்றனர். இதில் சுமித்திரைக்கு இயல்பாக ஏற்பட்ட கால்பாகத்தோடு ஏனையோர்க்குப் பங்கிட்டுக் கொடுத்ததிற் சிறிது சிந்தி யிருந்ததையுஞ் சேர்த்துத் தசரதர் கொடுத்ததால் அதன்பயனாக அவட்கு இரண்டு குழந்தைகள் பிறந்தனர். அவர்களே இலக்குவனும் சத்துருக்கனு மாவாரென்பது அனைவரு மறிந்த விஷயமே. இவ்விரு குழந்தைகளில் இலக்குமணன் இராமனோடும், சத்துருக்கன் பரதனோடும் சேர்ந்து பழகிவந்தனர். இவர்களுடைய சேர்க்கையை வான்மீகி முனிவர் ;

> "ஸர்வப்ரியகரஸ்தஸ்யா-ராமஸ்யாபி சரீரத:
> லக்ஷ்மணோலக்ஷ்மி ஸம்பந்நோ-பஹிப்ராண இவாபர:"

அதாவது 'லக்ஷ்மீகரம் நிறைந்த லக்ஷ்மணன் இராமனுடைய சரீரத்திற்கு வெளியில் சஞ்சரிக்கும் இரண்டாவது பிராணன்போன்று இராமனுக்குப் பிரியகரமான சகல கைங்கரியங்களையுஞ் செய்துவந்தான்' என்று கூறியிருக்கிறார். இதுபோல இலக்குவனிடம் இராமனுக்குள்ள பற்றுதலைக் கூறுமிடத்து;

> நசதேந விநா நித்ராம் லபதே புருஷோத்தம:
> ம்ருஷ்ட மன்ன முபாநீத மச்நாதி நசதம் விநா:

அதாவது, புரோஷத்தமனான ராமனும் இலக்குவனில்லாமல் நித்திரை செய்யமாட்டான், தனக்குவரும் பக்ஷணவகை முதலிய உண்டிகளையும் உட்கொள்ளான்.

இஃதன்றி, இராமன் எப்பொழுது வேட்டைக்குச் செல்வானோ அப்பொழுது தான் விற்பிடித்து இராமனைப் பாதுகாத்துச் செல்வான். இவ்வாறே பரதனுக்கும் சத்துருக்னன் கைங்கரியங்களைச் செய்து உயிர்க்குயிராயிருந்தானென்று கூறியுள்ளார்.

இதனால் இராமனும் இலக்குமணனும் ஒரு வகையில் ஒரு தன்மையுடையவரென்றும், பரதனும் சத்துருக்கனுமங்ஙனமே யென்றும் விளங்குகின்றது. ஆகவே தம்முன் ஒத்த தன்மையுடைய இலக்குமணனும் சத்துருக்கனும், தம்முன் ஒத்த தன்மையுடைய இராமனுடனும் பரதனுடனும் முறையே சேர்ந்தனரென்க. இது பற்றியே கம்பர்பெருமான் இவ்விஷயத்தைக் குகன் வாக்கில் வைத்து,

> "நம்பியும் என்நாயகனை ஒக்கின்றான் அயல் நின்றான்
> தம்பியையும் ஒக்கின்றான் "

என்று கூறியிருக்கின்றார். இலக்குமணனும் சத்துருக்கனும் ஒரு தாய் வயிற்றிற் பிறந்த சகோதரரன்றோ? அவர்கள் தம்முன் ஒன்றுசேர்ந் துறையாமல் முறையே இராமனிடமும் பரதனிடமுஞ் சேர்ந்துறையக் காரணமிருக்கவேண்டும். அதற்குப் பல காரணங்களிருக்கின்றனவெனினும் ஈண்டுக் குண சம்பந்தமான ஒரு காரணத்தைமட்டும் தலைமையாகக் கூறி விளக்குவாம். இராமனுக்கும் இலக்குமணனுக்கும் ஏற்பட்ட நட்பவொற்றுமைக்கு எக்காரணமோ அதுவே பரதனுக்கும் சத்துருக்கனுக்கும் அமைந்த காரணமாகும்.

உலகத்திலுள்ள ஒவ்வொரு இயற்கைப் பொருளுக்கும் மறுதலைப் பொருளுண்டு. எதிர்ப்பொருளில்லாதபொருள் சிறப்படையாது. ஆதலால் ஒவ்வொரு பொருளும் தன் எதிர்ப்பொருளாற் சிறப்படைகின்றது. இங்ஙனமமைவது பிரகிருதியினமைப்பாகும். இவ்வாறமைய வில்லையாயின் காலச் சக்கிரம் நடை பெறாது. இது போலவே இராமலக்குமணரின் சேர்க்கையும் அமைந்ததாகும். இவ்விருவரும் சகோதரபாவ முறையில் ஒத்த மனதுடையவராயிருப்பினும் குணசம்பந்தத்தில் பகலும் இரவும் போன்றும், வெளிச்சமும் இருளும்போன்றும், சாந்தமும் வெகுளியும்போன்றும் பொருத்தமுடையவர். இரவு, இருள், வெகுளி இவைகள் முறையே பகல், வெளிச்சம், சாந்த மிவைகளின் பெருமையை விளக்குகின்றன. இவையின்றேல் லவைகளுக்குப் பெருமையில்லை. அதுபோல இலக்குமணனுடைய குணம் இராமனுடைய குணப்பெருமையை விளக்கவே யமைந்ததென்க.

கம்பர்பெருமான் இராமனைக் குறிக்கும்போதெல்லாம் "கருணையின் நிலையமன்னான்" "தருமத்தின் தனிமூர்த்தி" "கருணைமாண்பலா னனம் வேறிலான்" என்று புகன்று அவன் குணப்பயனைக் குறிப்பிட்டுள்ளார். இதைச் சேர்ந்தே இராமனது செய்கையும் நிகழும். இலக்குமணனைக் குறிப்பிடும்போது "அண்ணற் கரியோன் தனதாதியின் மூர்த்தியொத்தான்" "முற்றுமதியும் மிலைந்தான் முனிந்தானை யன்னான்" "திரிபுரஞ் செற்ற தேவனு மிவனே" என்றத் தொடக்கத்த அடைமொழிகளால் உய்த்துணரக் கூறியுள்ளார். இராமன் எப்பொழுது தன்னியற்கைக் குணத்திலிருப்பானோ அப்பொழுது இலக்குமணன் தன்னியற்கைக் குணத்திற் தலைசிறந்து நிற்பான். இதுபோன்ற பல சான்றுகளை வைத்துச் சத்துவகுண முடையவன் இராமனென்றும், ரஜோகுண முடையவன் இலக்குமணனென்று மறியலாகும். இதுபோன்ற அமைப்பே பரத சத்துருக்கனருக் கேற்பட்டதாம். ஆயின், இராமாயணத்தில் தாமதகுணமுடையார் யாவரெனின் இராவணாதியரக்கர்களேயாவர். ஆதலால் தாமத குணமுடையவரின் தன்மையை நீக்கி மற்றமைந்த சத்துவ ரஜோ குணங்களுடைய இராம லக்ஷமணர்களின் குணத்தைச் சிறிது குறிப்பிடுவோம்.

இராமனும் இலக்குமணனும் இணைபிரியாத ஒத்த சேர்க்கையுடையவர். இவர்களுடைய தேகநிறம் ஒருவர்க்கொருவர் மிக மாறுபட்டுள்ளது. இவர்களின் குணமும் இதுபோல மாறுபட்டதாயினும் ஒற்றுமையுடையதேயாகும். இலக்குமணனுடைய ரஜோகுணம் இராமனுடைய ஸத்துவகுணப் பெருமையை விளக்குவதற்கே ஏற்பட்டுள்ள தென்பது பிறகு நன்கு அறியலாகும்.

> " செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்
> காக்கிலென் காவாக்கா லென்'' [லிடத்துக்

என்றபடி இராமன் எப்பொழுது தன் தன்மைக்கேற்ப ஸத்துவ குணத்தின் பயனான பொறுமையோடிருப்பானோ அப்பொழுது இலக்குமணன் ரஜோ குணக் கூறுபாடான கோபநிலையிற் குறையாது நிற்பான். அக்கோபமும் வெளிச்சத்தின் முன் இருள் நில்லாதகன்று அதன் பெருமையை விளக்கிச் செல்வதுபோல நீங்கிவிடும். ஆயின் இராமனும் வெகுண்டு பல செய்கைகளைச் செய்திருக்கின்றானே! என்ற வினா எழுவ தியற்கை.

கணித சாஸ்திரத்தில் (சோதிடத்தில்) ஒவ்வொரு திசையிலும் தனித்தனி நவக்கிரகங்களின் அபகாரயிருத்தல்போல ஒவ்வொரு குணத்திலும் முக்குணங்களின் அதிகாரக் கூறுகளுண்டு. அங்ஙனமிருந்தபோதிலும் இயற்கையான தலைமைக் குணத்தின் கூறுபரடே யதிகரித்திருக்கும். வெற்றிலை, பாக்கு, நீறு என்ற மூன்றினுடையவும் இயற்கைக்குணம் தனித்தனியிருந்த போதிலும் அவைக ளொன்றுசேர்ந்த போது குணம் மாறுதல்போல ஒவ்வொரு குணத்திலும் தனித்தனி முக்குணங்கள் சேர அதன் தன்மையுந் திரியும். அதன் முடிவையே யாம் குறியாகக் கொள்ளவேண்டும். அவ்வாறு நோக்கினால் இலக்குமணனுக்கு ரஜோகுணத் தன்மையே முடிவாகத்தோன்றும். இராமன் வசிட்ட முனிவரிட முபதேசம் பெற்று விரதவொழுக்கந் தலைமேற்கொண்டு தனியிடத்திற் சென்று முடிசூட்டு சமையத்தை எதிர் பார்த்திருக்கும்போது கைகேயி இராமனை யழைத்துவரச் செய்து அவனிடம்,

> " ஆழிசூழுலக மெல்லாம் பரதனேயாள நீபோய்த்
> தாழிருஞ் சடைகள் தாங்கித் தாங்கருந் தவ
> [மேற்கொண்டு
>
> பூழிவெங் கானம் நண்ணிப் புண்ணியத்துறைகளாடி
> ஏழிரண் டாண்டில் வாவென்றியம் பினனரசன்''

ஆனால் உன் தந்தை இவ்விவரத்தை நேரிற்சொல்ல முடியாதவரா யிருக்கின்றா'' ரென்றான். இத்தருணம் இவ்வாறு சொன்னால் யார் மனந்தான் பொறுக்கும்? இச்சந்தர்ப்பத்தைப்படிக்கு மன்பர்கள் மனமும் தன்னியற்கைக்குமாறுபடு மென்பதைச் சொல்லவும் வேண்டுமோ? நிற்க,

இவ்வாசகஞ் செவிமடுத்த இராமன் தன் விருப்பத்திற்கேற்ப அமைந்ததென்று மிகுந்த சந்தோஷங் கொண்டான். கம்பர் பெருமானும் "இவ்வாசகங் கேட்குமுன் தாமரை மலருக்கொப்பாயிருந்த இராமனுடைய முகம் கேட்டபின் அம்மலரினழகை வென்றதென்று'' கூறுகின்றார். இந்நிகழ்ச்சி அனைவர் மனதையும் ஒன்றாக ஈர்த்துச்சென்று இராமனுடைய குணத்தி லீடுபடுத்திப் பாராட்டச் செய்கின்றதன்றோ!

இச்சமயம் இலக்குமணனது மனோநிலைமை எவ்வாறிருந்ததெனக் கவனிப்போம். தயிரினின்று வெண்ணெய் திரண்டு வருங்கால் தாழியுடைந்ததுபோல இராமன் முடி புனைந்து நாட்டுக்குத் தலைவனாக வருவானென்று களித்து இராமனுக்குறும் பெருமை தத்தமக்குற்றதாகக் களிப்படைந்த நகரத்தார் அவ்வாறு நிகழாமைகண்டு வருந்தி அல்லோல கல்லோலப்பட்டுக் கூறுவதைக்கேட்டு இலக்குமணன் யாவராலும் மூட்டாத காலக்கடைத் தீயென மூண்டெழுந்தான். இவனது கோபக்குறிப்பைக் கம்பர் ;

> " கண்ணிற் கடைத்தீயுக; நெற்றியிற் கற்றைநாற;
> விண்ணிற் சுடரும் சுடர்தோன்ற; மெய்நீர் விரிப்ப;
> உண்ணிற்கு முயிர்ப்பெனு மூதைபிறங்க நின்ற[தான்''
> அண்ணற் பெரியோன் தனதாதியின் மூர்த்தியொத்

என்று கூறுகின்றார். இவ்வாறு இலக்குமணன் கதங்கொண்டு பேருலகத்தில் பெண்ணாட்ட மொட்டேன் ; இதற்குமாறாகப் போருவந்தோரைப் போர்செய்து கொன்று புவிப்பாரந் தீர்ப்பேன் ; இப்பொழுதோர் கோவினைக் கொற்றமௌலி கவிப்பேன் ; இதைக் காக்குனர்வந்து காமின்'' என்றுகூறி யாரவாரித்து மந்திர மலை திரிதலையொப்பக் கறங்கிப் பலவாறு செய்ய வில்லை நாண்பூட்டிக் குணத்தொனி செய்தான். இவ்வில் நாணொலியைத் தன் சிறிய தாயைச் சமாதானஞ்செய்து கொண்டிருக்கும் இராமன் கேட்டு ;

> "கால்தாக்க நிமிர்ந்து புகைந்து கனன்று பொங்கும்
> ஆறுக்கனல் ஆற்றுமோர் அஞ்சன மேகமன்ன''

மாறாத சொல்மாரி வழங்கிவந்து என்னைத்த! என் நீ இமையோரை முனிந்திலாதாய்! சன்னத்தமாகித் தனு வேந்துதற்கு ஏது? வென்று கூறினன்.

இருவரும் சந்தித்த பிறகு நடக்கும் எதிர் வாதங்கள் முறையே சாந்தத்தையும் கோபத்தையும் விளைவிக்குமென்பது நோக்குவார்க்குப் புலனும். இச்சந்தர்ப்பத்தை அன்பர்கள் படித்துப் பார்த்தால் இவ்விருவர் தன்மையும் தெற்றன விளங்கும். இராமன் பலவாறு நயவார்த்தை கூறியும் இலக்குமணனது கோபத்தினளவு குறையவில்லை. இறுதியில் இராமன் முடிவாக ;

> " நன்சொற்கள் தந்தெனை நாளும்வளர்த்த தாதை
> தன்சொற் கடந்து எற்கு அரசாள்வது தக்கதன்றால்
> என்சொற் கடந்தா லுனக்கு யாதுள து ஈனம்''

என்று வற்புறுத்திக் கூறியதைக் கேட்டதும் இலக்குமணனது கோப அளவு படிப் படியாகக் கூட இறங்காமல் திடீரெனத் தாழ்ந்து விட்டது. உடனே ;

> "சீற்றம் துறந்தான் எதிர்நின்று தெரிந்து செப்பும்
> மாற்றம் துறந்தான் மறைநான்கென வாங்கல் செல்லா
> நாற்றெண்திரை வேலையின் நம்பிதன் ஆணையாலே
> ஏற்றந்தொடங்காக் கடலிற் றணிவெய்தி நின்றான்''

இச் சந்தர்ப்பத்தில் இராமனடையும் ஏற்றம் நன்கு விளங்குகின்றது.

(தொடரும்) T. M. கலியாணராமய்யர்.

189019

காந்திமதி என்னும்

காந்தாரநாட்டுக் கட்டழகி.

(691-வது பக்கத் தொடர்ச்சி)

31. தூங்கக் கண் இல்லையே!

கார்முகிலும் மின்னலும் கலந்திந்தப் பார்மிசையே தவழ்ந்ததென விரிந்தலை கூந்தலுடன் தரையிற் சாய்ந்த மாலினியைச் சித்ராங்கன் ஓடி எடுத்துத் தன் மடிமீது சார்த்தி அவள் முகத்தைப் பரிவினோடும் இரங்கி நோக்கக் காந்திமதியும் மந்தாகினியும் அவர்பால் விரைந்தணுகி, மூர்ச்சித்திருப்பாள் கால் கைகளைப் பதுமத்திதமுடன் இதழ்பிணையு மாறுபோல் தமது கரங்களால் வருடிப் பாண்மகள் வேடத்திருந்த அம்மாலினிக்குத் தன் நினைவு வரும் வண்ணம் உபசரித்தனர். இளவரசன் பாண்மகளிடம் அரியதோர் பரிவு இவ்வகைக் காட்டுதற்குக் காரணம் நன்றியே என்று காந்திமதி கருதினளாகையால், மடக்கொடி யொருத்தியை அவன் தன் மடிமீது வளர்த்தி யிருப்பது அவளுக்கு முறைநின்று திறம்பிய செயலொன்றாகத் தோன்றவில்லை. சித்ராங்கன்மாத்திரம் நாணமீதூர்ந்த நோக்கொன்று மந்தாகினியின்பால் போக்கினன். அப்பார்வை அவள் கண்களிற்பட்டது. அவளும், "அரசே, அயிரேல், நமது சங்கேதம் அவ்வாறன்றோ'' என்பாள்போல் எதிர்

நோக்களித்து, "அயலான் ஒருத்தியின்முன் இக்காரியம் அடாததாய்க் காணுமே" என்னும் குறிப்புத் தோன்றக் காந்திமதியைக் கடைக்கண்ணால் காட்டினன்.

மாலினிக்கும் மூர்ச்சனை மெள்ளமெள்ளத் தெளியலாயிற்று. அந்நங்கையின் நயனங்கள் சிறிது அலரத் தன்னுள்நின் றகன்றதென நினைத்த உயிரே உருவெடுத்துத் திகழ்ந்ததுபோல் விளங்கும் இளவரசனின் முகத்தைக் கண்ணாரக் கண்டாள். உற்றதோர் உவகைக்கும் வியப்பிற்கும் தன்னுள்ளத்தைத் துறந்து சிறிதுபோது வெற்றுடம்பு ஆயினள். ஆயவள் சாய்ந்த நிலை தவிர்ந்து எழுந்திருக்க ஆற்றாளாய்க் காதலனை நயந்து நோக்கி "எனக்கொரு இன்பக் களஞ்சியமே" என வாயெடுத்தாள். அந்தக்காலை, விசும்புநின்று மதி இரண்டு ஒருங்கே உதித்து இறங்கினாற்போல், அருகிருந்த மாதர் மற்றிருவர் முகமும் அவன் காண, நாணத்தால் அவளிரு மதுவளர் குவளைக் கண்களும் குமுதச் செவ்வாயும் குவிர்தன. வேளனைய காளையின வேந்தனும் வேட்கையுடன் வெட்கமும் போராடும் உள்ளத்தனாய்ப் புன்னகை யரும்பிச் சித்திரம் இவனெனச் சும்மாவிருந்தான்.

வாயொன்றே அங்கிருந்த யாவர்க்கும் வாளா இருந்தது. கண்களோ அவரவர் உள்ளத்திருந்த குறிப்பத்தனையும் சொற்கடந்த நயத்தோடு நன்கு பேசின. காதலின் தன்மை ஈதென்றால் தனதுளம் கல்லோவெனக் காந்தி கருதினள். 'யான் பிறந்ததால் பெறுதற்கிருந்த பேறெலாம் இன்று பெற்றேன். இனி இருந்தால் என்விதி யாது செய்யுமோ! உவகைக் கடங்காத என்னுயிர் நீங்கவும் பெறும். அன்னதன்முன் இன்னுமோர் முறை நின்னுடைய முகத்தை நன்கு நோக்குவேன்!" எனத் தன் காதலனை மாலினி கண்களால் பருகினள். பருகிய அக்கண்களுக்குள் சித்ராங்கனது கண்கள் காதலைக் குழமியிட்டு ஊற்றின. 'என் கோமகன் உள்ளம் பூரிக்கும் இந்நிலைகாண எத்தவம் செய்தனளோ' என மந்தாகினி கண்களால் தன் கடவுளைப் பரவினள். இதற்கிடையில் மாலினி இளவரசன் மடிவிட்டுத் தன் தலையை நொய்தின் நீக்கிக் கூந்தலைக் கோதி முடித்தனளாய் நிமிர்ந்தனள். சித்ராங்கனும் அவள்முகம் இனிது நோக்கிப் "பேதாய், மாலினி, யான் மாண்டே னென்றுகொண்டு அருந்துயர் பெரிதும் அடைந் துழன்றாயோ?" வென்றனன். இம்மொழி கேட்ட காந்திமதி துண்ணெனத் திரும்பி மந்தாகினியின் கண்களை நோக்கினள். அந்நோக்கின் குறிப்பறிந்து அவளும், "ஆம், பரந்தகன்ற எம்மிறைவர் இருதயத்தில் நாங்களிருவரும் ஒன்றிவாழ இடமுளது," என்றனள். தனக்குறும் இடரொன்றுங் கருதாது இளவரசனைக் காப்பாற்றும் உரிமை தனக்கே உளதென்று மாலினி முன் பாண்மகளாய்க் கூறியது காந்திமதியின் நினைவிற்கு வர இதுகாறும் நிகழ்ந்தவற்றின் பொருள்யாவும் அவள் உணர்ந்து கொண்டாள்.

காந்திமதிக்கு மந்தாகினி உரைத்த இம்மொழி சித்ராங்கனின் மனதிற்கு அமைதி யளித்ததெனினும் மாலினியோ மருண்டு விழிப்பதைக் காணவே அவனுக்குச் சிறிதளவு சஞ்சல முண்டாயிற்று. 'ஒருகால் இவள் எலிப்புழையாயினும் தனிப்புழையே தக்கதென மதிக்கும் தன்மையளோ' வென்று சங்கையுற்று, அது தெளியுமாறு, "மாலினி, நின்னருமைச் சகோதரி கூறியதற்குப் பதிற் சொல்லாதிருப்பதேன்?" எனவினவினன். மாலினியோ காந்திமதிக் கருகு சார்ந்து, ஓரளவு ஒளிந்து நின்றனளாய்க் "காந்தி, யானிங்குக் காண்பது கனவுதான் அல்லவே! நினைவேயோ, நீ சொல்? உன் வாய் நின்று கேட்டாலன்றி இப்பெரு மகிழ்ச்சியை யான் நினைவில் பெறுதற்குற்ற பாக்கியம் புரிந்தனளேனென்று நம்பமாட்டேன்" என்றனள்.

"பலநாள் கண்டுகண்டு கரைந்துருகிய கனவெலாம் இன்றே யுனக்கு நினைவாய்த் திரண்டு நிலைபெற்றது," எனக் காந்திமதி இளமுறுவல் தவழும் மொழிகளால் விளம்பி, "இனி, யான் இங்கிருத்தல் அழகன்று. மனைக்குரிய சித்திரங்களை நீவிர் மூவரும் வகுத்து உசாவுதற்காசையுடையரா யிருப்பீர். பெரும, என்றனக்கு விடையளித்தி" எனக் கோமகற்கும் மற்றிரு மாதரார்க்கும் வணக்கஞ்செய்து அகன்றனள். அத்தருணம் இரத்தினபுரியில், உலைக்கருகு மெழுகென நெகிழ்ந்துருகும் உரத்திண்டோள் கம்பியச் செல்வன் கலாநாதன்பால் பரிவும், அவன் தன்வயின் உந்திய காதலின் நினைவும் காந்திமதியின் மனத்தினின்று அவ்விரவு முழுவதும் பிரியவில்லை.

காந்திமதி யகன்றதன்பின், சித்ராங்கன் தன்சிந்தையுளுற்றசங்கை தெளியுமாறு ஓர்விடை மாலினியிடமிருந்து கிடைக்காமையால் அவளை நயந்து நோக்கிக் கவலையால் சிறிதுலைந்த குரலோடும், "மாலினி, நின்னையும் என் நன்மனையாய் யான் பெற்றிருக்க மந்தாகினி பெரியதோர் உவகை உடையளா யிருக்கின்றாள் .....நீயோ! நதியிற் குதித்தொழிய மீண்டொருகால் நாடுகின்றாயோ...... அல்லாக்கால், நமனது வாய்நின்று பறித்துவந்த என்னை நிந்தித்தே யுன் நகையால் நலிகின்றாயோ......நீவிரிருவரும் எனதுயிரோடு பொருந்திவாழ இசையீராயின்..." இசையாராயின் இளவரசன் யாது செய்திருப்பனோ அறியோம். அவன் மொழியுமுறை முற்று முடியாமுன் மாலினி, சித்ராங்கனது காதருகு வந்து, "அரசே, அன்பிற் பறவையின்பால் பயின்றபாடம் நடைபெற வேண்டுமாயின், பின் துயில்தற்குக் கண்ணொன்றும் நினக்கிலதாகும் என்றே தாழும் என்னுள்ளம்," என அவன் செவிக்கமுது சிறிதூட்டினள்.

இம்மொழிகேட்ட இளவரசன் துயிலுதற்கோர் கண் இல்லாக்குறையை நினைத்திலன்; இமையவர் வாழ்கின்ற பொன்னுலகே புக்கிருந்தவர்களுள் ஒருவன் ஆனலெனமகிழ் சிறந்து ஓங்கும் உள்ளத்தனாய், அப்பைங்குழல் கருவிழி வெண்ணகைக் காரிகையின் செங்கமலக் கரத்தினை எடுத்து "நினக்கொரு தங்கைநல்லாள் யானளிக்க ஏற்றுக்கொள்" என மந்தாகினிப் பெருமாட்டியின் கரத்துள் பொத்திக் கையடை தந்தனன். அப்பெருந்தகைப் பெண்ணரசியும் மாலியின் கையினை மீண்டுமக் கோமகனின் கையில் அமைத்து, "நினக்கொரு மனையாள் தன்னை யானளிக்க, நாயக, நீயுமே ஏற்றுக்கொள்" என நன்கொடை நல்கினள்.

கொந்தளிக்குங் கடலொலியேமணமுழவாய்த் திங்கள் பொழி நிலவொளியும் மலர்மழையாய்த் தென்றலெலனுந் தேரூர்ந்து மாளிகைக்குள் சென்றடைந்தார் காதல்வளர் மூவர்தாமே.

T. N. சேஷாசலம்.

அகப்பொருள் வரலாறு

(695-ம் பக்கத் தொடர்ச்சி)

உடன்போக்கு.

பொய்யு மெய்யுமான பல காரணங்களை யெடுத்துக் காட்டித் தலைவனை வரைவு முடுக்கலுற்ற பாங்கி, தலைவன் இரவில் வந்தாற் பகலில் வருகவென்றும், பகலில் வந்தால் இரவில் வருகவென்றும், இனி இரவிலும் வாரற்க பகலிலும் வாரற்க என்றும் ஒவ்வொரு நாள் ஒவ்வொரு காரணங்கூறி அவனை வரவுவிலக்க, அதனால் மிகக் கவன்று வருந்திய தலைமகன் இனித் தலைவியைக் காணப் பெறுமாறு யாதெனப் பாங்கியை உசாவினன். அதற்கவள், "பேதைக் குறமகளிர் யாம் யாங்கறிகோம், ஐய! எந்தலைவிக்கு எந்தமர் பரிசமாகத் தொடுத்த பொன்னைக் கொடுத்து அவளை மணப்பதென்பது அரிதினுமரிது. பொன்மலையை விலையாகக் கொடுப்பினும் அவளது சிற்றிடைக்கு நேராகாதென்று மதிக்கின்ற எந்தமர் அவளுடைய பேருறுப்புக்களுக்குப் பெறும்விலை யாதுளது? உம்முடைய குலத்தையும் நலத்தையும் நயந்து அவர்கள் அவளை உமக்குக் கொடுக்க நேர்ந்தாலன்றி நீர் அவளைப் பெறுதலரிது. அவளோ உம்மைப் பிரிந்தினி ஒருகணமும் உயிர்தரித்திராள். ஆகையால் அவளைப் பிறரறியாமல் உம்மூருக்கு உடன்கொண்டு போதலே உசிதம்." என்றுணர்த்தினள். அதுவே தான் செய்யக்கருதியதாயினும் அவன், பாங்கியின் கருத்தை நன்கறிந்து தெளியக் கருதிப் "பேறிவான்ற பெண்ணருங்கலமே, கொடுஞ்சுரம் இடையிட்ட கல்லதாத்தத்தூடு அடியைந்து எடுத்துவைத்து ஐங்காத மென்றஞ்சும் இத்தளிரடி மெல்லியலாளைக் கால்நடையாக அழைத்துக் கொண்டுபோவது எப்படியியலும்? நான் சேணிடைச் சென்று செம்பொன்னீட்டித் திங்களொன்று தேய்வதன்முன் திரும்பிவந்து மணமுடித்துக் கொள்கின்றேன். அதுகாறும் அவளைத் தேற்றிப் போற்றியிரு." என்றான். அதற்கு அவள், "ஐய, எந்தலைவியின் மனநிலையை அறியாது நீரிவ்வண்ணம் இயம்புகின்றீர். ஆருயிரன்பரைத் தணந்துறையும் பிரிவினுஞ் சுடுமோ அப்பெருஞ்சுரம்? கவவுக்கை நெகிழாமல் உம்முடன் நடந்தால் அக்கொடுஞ்சுரத்துக் கள்ளிக்காடும் வெங்காற்றும் பொங்கழலும் உங்காதலிக்கு நன்மாச் சோலையும் தண்ணினந் தென்றலும் தாமரைப் பொய்கையும் போலுமன்றே." என்று சொல்லக்கேட்ட தலைமகன் "உமது கருத்து அவ்வாறாயின் நான் வேறென்ன சொல்லக் கிடக்கின்றது? அவ்வாறே செய்வதற்குத் தயாராக நாளையே நான் வருகிறேன். நானின்று இங்குவந்ததையும், மேற்செய்யத் துணிந்த காரியத்தையும் அவளுக்குணர்த்தி அவளை உடன்படுத்திவை." என்று பாங்கிக்குரைத்து விடைபெற்றுச் சென்றான். தலைவியைக் காணும் வேணவாவோடு வந்தானாயினும் அன்று அது கைகூடாதென்றோர்ந்தும் மறுநாளவளைக் கட்டாயங் காணப் பெறலா மென்ற நம்பிக்கையாலும் அவன் மனக்கிலேச மின்றித் தன் பதிக்கு மீண்டான். மீண்டவன் அன்றிரவெல்லாம் தான் எவ்விடத்துத் தலைவியைக் கொண்டுபோய்ச் சேர்ப்பதென்றும், எவ்வழியாகச் செல்லலாமென்றும், எதிர்ப்பட்டோரையுறுவண்ணம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்றும், இடையிடையே எங்கெங்குத் தங்கலாமென்றும் பலவாறாலோசித்து இறுதியாக இன்னவின்னவாறு செய்வதென்று தனக்குள்ளே தீர்மானித்துக் கொண்டான்.

அங்கே அவன் செய்கை அன்னணமாக, இங்கே பாங்கி வீட்டுக்கு வந்து தலைவிக்கு உற்றதையுரைத்துத் தலைவனது தீர்மானத்தையும் உணர்த்தினள். அதைக் கேட்ட தலைவி, "அவர் என்னை எங்கழைத்தேகினும் அவரைப் பின்றொடர்ந்து செல்ல விரைந்து அவாவி எழுகின்றது என் பேதைமனம். ஆனால் எனக்கு அறிவு பிறந்த பருவத்திற் பிறந்து என்னைவிட்டு ஒருபோதும் நீங்காதிருந்த நாணம் இன்று ஆசைக்குத் தோற்றுத் தொலைகின்றது. நான் என் செய்வேன் தோழீ," என்று வருந்தப் பாங்கி, "பிடிசேர் நுண்ணிடைமென்னடை மாதே, மகளிர்க்குரிய நாற்பெருங் குணங்களுட் சிறந்தது நாணேயாயினும், அதனினு மேம்பட்டது கற்பன்றோ?

உயிரினுஞ் * சிறந்தன்று நாணே; நாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்புச் * சிறந்தன்று

என்று அவளைத் தெருட்டினள். தெருட்டலுந் தலைவி, "அவர்க்குமுனக்கும் இது நன்றென்று தோன்றுவதால் உங்களிஷ்டப்படி நடப்பதன்றி வேறு நான் செயற்பாலதென்" என்று கூறி உடன்போக்குக்கு ஒருப்பட்டாள்.

மறுநாளிரவில் தலைவன் வந்து குறியிடத்திருக்கப் பாங்கி சென்று அவனைக் கண்டு தலைவியினிசைவை அவனுக்கறிவித்து, அவனை அங்கே காத்திருக்கச் சொல்லித் தான் வீட்டுக்கு மீண்டு, தலைவன் வரவைத் தலைவிக்குணர்த்தி, போவதற்குவேண்டிய ஏற்பாடுகளைச் செய்து முடித்து, வீட்டைவிட்டு வெளிக்கிளம்புவதற்கேற்ற சமயத்தை எதிர்பார்த்து நின்றாள். வீட்டிலெல்லாரும் படுத்துறங்கியவுடன் பாங்கி தலைவியை மெல்லக் குறியிடம் அழைத்துச் சென்று தலைவனிடஞ்சேர்த்து, "வாய்மை குன்றாவடிவேல் அண்ணால்; ஒருபோதும் எம்மை விட்டுப் பிரிந்து தனித்திருந்தறியாத பேதை இவளைக் கையடையாக இப்பொழுதும்மிடம் அளித்தேன். இனி இவளுக்கு மெய்ப்பாங்கியும் கைத்தாயும் நற்றாயும் நீர்தாம். காற்றுக்கூட அவள் மேனியில் கடிதுவந்தடித்து அலைத்துவருத்தாது இவளைப்பாதுகாத்துப் போற்றியருளும். வள்ளியுமுருகனும்போல என்றும் பிரியாது அன்புமாறாதிரும். இவள் மென்தோல் திரைத்துக் கூந்தல் நரைத்து மூப்புற்ற காலையும் இவளை நீத்தலோம்புமதி.

தாயுடன் றலைக்குங் காலையும் வாய்விட்
டன்னாய் என்னுங் குழவி போல
இன்னா செயினும் இனிதலை யளிப்பினும்
நின்வரைப் பினள்என் றோழி;
தன்னுறு விழுமங் களைஞரோ இலளே!
மாமலை நாட ‡மறவா திமோ.

என்று ஓம்படைசாற்றித் தலைவன்கையில் அவளைக் கொடுத்துப் பின் தலைவியைக் குறுகி, "பாலை யவாவிச் செல்லுஞ் செங்காலன்னமே, நீ எம்பிரிவைக் குறித்து வருந்தாதுபோ. காதலருடன் செல்லுங் காடெல்லாம் உனக்கு நாடன்றோ? இங்கே தங்கியிருந்துன் அன்னைக்கும் பிறர்க்கும் ஏற்பனகூறி, வெவ்வலர் தூற்றும் ஊரார் வாயை அடங்கச்செய்து, நீவளர்க்குங் கிள்ளையையும் பூவையையும் உன்றங்கைமாரிடந் தந்து பின்பு நானங்குடம்வந்து சேருகின்றேன். உமக்கு நன்மையெல்லாம் உண்டாகுக; தீங்கொன்றும் வாராதொழிக. காத்து நல்குமின் தெய்வதங்காள்" என்று வாழ்த்தி வணங்கிச், சற்றங்கே

*சிறந்தன்று - சிறந்தது. ‡ மறவாதிமோ-மறவாதிரு.

நின்று, அவர்களுருவமும் நடையொலியும் புலப்படாது மறையுமட்டும் பார்த்திருந்து பின் பாழ்பட்ட செஞ் சோடு வீட்டினுட்புகுந்து படுத்தான்.

தையறன் கற்புந் தனது தகவும் வாய்மையும், செய்யதிண் வில்லுமே சேமமாகக் கொண்டு நள்ளிருளில் நடுக்காட்டிலே அவனவனோடு கொஞ்ச தூரஞ் சென்றதுந் திங்களுதித்து வெஞ்சிலைப் புருவத்தாள்தன் மெல்லடிக்கேற்ப வெண்ணூற் பஞ்சிடைப் படுத்தாலென்ன வெண்ணிலாப் பரப்ப அவர்கள் இனிது போனார். இராமுழுது மெல்ல நடந்து விடியற்காலத்தில் அவர்கள் மாபலாமுதலிய தீங்கனித்தருக்கள் செறிந்தவொரு சோலையைநண்ணி அருகே ஒருபொய்கையையுங் கண்டு அதன் கரையிற் சிறிதிளைப்பாறியிருந்து பின் கைக்கெட்டிய கனிகளைப் பறித்துண்டு, நீர்பருகித் தம் பசிதாகங்களைப் போக்கிக்கொண்டு அவ்விடம் விட்டெழுந்து வழிக்கொண்டேகினர். இருபுறத்து முள்ள காட்சி விநோதங்களைக் காட்டிக் கொண்டு தான் பக்கத்தே செல்ல அவன் தன் கையைத் தழுவி மெல்ல மெல்ல நடந்து இரு காத தூரம் சென்றதும் அவர்களொரு நெடுஞ் சுரத்தைக் குறுகினர். குறுகலும் குடுண்ட பரல்களின்மீது நடந்ததாற் பாதங்கள் சிவந்து, வெகுதூரம் நடந்துவந்த களைப்பால் மேனி வாடி, வெயிலால் நெற்றியிற் குறுவியர்வரும்பித் தளர்ந்து தள்ளாடிச்செல்லுந் தலைவியின் நிலையைக் கண்ணுற்று, அவன் பின்னும் நடந்து அவ்வனத்தைக் கடக்க அவள் ஆற்றாளெனத் தேர்ந்து, எதிரே சிறிது தூரத்தில் பசிய பொழிலொன்றைக் கண்டு, அங்கே அவளை மெல்ல அழைத்துச் சென்று, "இங்கே இளைப்பாறி இற்றை நண்பகல் முழுவதுந் தங்கியிருந்து சூரியன் வெம்மை தணிந்து தரையின்வெப்பஞ் சிறிதாறியபின் நடந்து சென்றால் இவ்வனத்தைக் கடத்தல் எளிதாகும்" என்றான். அப்படியே அவளை ஒரு குளிர்தரு நீழலிலமர்த்தி அவளுடைய சிவந்த பாதங்களை வருடியும், நுதலை நீவி வியர்வையைத் துடைத்தும், கூந்தலைக் கோதி முடித்துக் குராமரா மலர்களைச் சூட்டியும், முன்றானை கொண்டு மென்கா லசைத்தும் அவளது அயர்ச்சியை மாற்றியிருந்து, பின் சூரியன், தானும் எய்த்துச் சோர்ந்தான் போல, மேற்கு மலையை நோக்கிச் சாய்ந்தோய்ந்து இறங்கும்போது, அவர்கள் அவ்விடம் விட்டகன்று மேற்சென்றார்கள்.

செல்லும்போது, சிறிது தூரம் அவள் முன்னே செல்ல அவளுடைய சிறுபுறத்தையும் அசை நடையையுங் கண்டு மகிழ்ந்து அவன் பின்னே செல்வதும், பிறகு அவன் முன்னே செல்ல அவனது புறக்கொடையையும் வலிச்செலவையும் நோக்கி மகிழ்ந்து அவள்பின்செல்வதுமாக ஒருவரையொருவர் பார்த்து வழி வருத்தந் தோன்றாது இன்புற்றுநடந்து அவ்வனத்தைக் கடந்து அப்பாற் செல்லும்போது, எதிர்வருவோர் இவர்களிருவரையும் மாறிமாறி நோக்கி இவர்களுடைய கண்கொள்ளா எழிற்றிறத்தை வியந்து,

கருவார் புயலொன்றுங் கண்டறி யாதவிக் கானகத்தே
வருவார் சிலரிவர்; மற்றிவர் யாவர்கொல்? வாரிதந்த
திருவா மெனிலிவள் செங்கையிற் பங்கயம் இல்லை; செல் [வன்
மருவார் துளவணி மாலெனில் மார்பின் மறுவில்லையே,

என்று சிலரும்,

அரிகள்
உகளுமிக் கானிற்செல் வாரிவர் யாவர்கொல்!
உம்பர்பிரான்
மகனெனி லீங்கிவன் கற்பகஞ் சூடிலன்; வள்ளல் அவன்
துகளில் மருகனென்றால் மார்பில் நீபத் தொடை
[யிலையே

என்று சிலரும்,

அன்பனைத் தஞ்சொல்பின் செல்லும்
ஆடவன்; நீடவன்றன்
பின்பனைத் தோளி வருமிப் பெருஞ்சுரஞ்
செல்வதன்று.
பொன்பனைத் தன்ன இறையுறை தில்லைப்
பொலிமலர்மேல்
நன்பனைத் தண்ணற வுண்ணளி போன்றெளிர்
நாடகமே.

என்று சிலரும் பேசிச் செல்வார்கள்.

இவ்விதம் நடந்துசென்று இரவு வந்தணுகும்பொழுது அவ்விடத்து வாழ்வோர் சிலர் இவர்களையெதிர்ப்பட்டு, "இனிச்செல்லும் வழியில் நன்மக்களிலர். பொழுதுஞ் சென்றது. இவ்விரவு நீங்கள் எஞ்சிறு குடிலிற்றங்கி யாமுண்ணும் ஆமான் குட்டிறைச்சியை மரையின் பாலோடுண்டு, மான்தோற் பாயலில் படுத்துறங்கிப் பொழுது புலர்ந்தபின் எகுநெறி யேகலாம்."

மலைவில்லரன் திருப்பூங்கழல் வாழ்த்திவணங்கலர்போன்
*றலைநீப் பவன்மேற் கடலாழ்ந்தானார் அருகினியீண்
டிலைமற் றிவளும் மெலிந்தாள் இரவெம் †இலைமருவிக்
கலையி னுரியிற் றுயின்றெழுந் தேகைய மாலையிலே.

என்று ஆதரத்தோடும் நெறிவிலக்கினர்கள். இவர்களும் அதற்கிணங்கி அவருடன் சென்று அவ்விரவை அவரில்லிற் கழித்து மறுநாள் விடியற் காலத்திலெழுந்து முகமன் கூறி அவர்களிடம் விடைபெற்று அப்பாற் சென்றார்கள்.

இவ்வாறு இவர்கள் இருகாத தூரஞ் சென்றதும், தலைவி தலைமகனைப் பார்த்து "நாம்போகுமூர் இன்னும் எவ்வளவு தூரத்தில் இருக்கிறது?" என்று கேட்க, அவன் இன்னுங் கொஞ்ச தூரந்தானிருக்கிறது; அதோத் தெரிகிறதே அது அது என்று சொல்லிக் காட்டிக்கொண்டே சென்றான். அப்பொழுது அவ்வழியிலே எதிர்வருவோர் சிலர் தலைவியின் அயர்ந்த நடையையும், வெயிலால் வதங்கிய முகத்தையும் நோக்கி, இன்னுமொரு எவிடு தூரங்கடந்தால்.

"பூவிடை வண்டுக் கினியமர் தாரப் புதூறவைக்
காவிடை வண்டு விருந்திடும் வூருக் கழனியுமே
தோன்றும்." என்று சொல்லத் தலைவன் அதுதான் நம்பதி;

பாவையர் கொய்யும் பனிமலர்க் காவிது; பாவையர்தம்
ஆவியன் னுருடன் ஆடுந்துறைய தரும்பவிழ்பூங்
காவி களைந்து கடைசிய ரார்க்குங் கழனியுடன்
ஓவிய மாளிகைச் சூழ்விது காண் நம் மூறைபதியே

என்று அவளுக் குரைத்தான். நகரணித்தென்று கேட்டதும் அவள் தன் வருத்தங்களை முற்றுமறந்து விரைந்து நடக்கச் சீக்கிரத்தில் தன்னூரைச் சேர்ந்து தலைவன் தலைமகளோடு தன் மனைக்கண் உற்றான்,

சங்க முழங்க மணிமுர சார்ப்புத் தமரெதிர்கொள்
அங்கண் நலர்திகழ் ஆவணம் போயகன் மாளிகையிற்
பொங்கிலை வேலனும் பூவையும் மேவினர் புண்டரீகச்
செங்கண் மலர்த்தி கிரித்திரு மாலுக் திருவமொத்தே.

* அலை நீப்பவன்-அல்லைப் (இருட்டை) போக்குபவன்; சூரியன்.

† இலை-இல்லை; வீட்டை.

K. இராமரத்நம் ஐயர்.

கம்ப ராமாயணம்.

பாலகாண்டம்

7. தாடகை வதைப் படலம்.

(697-ம் பக்கத் தொடர்ச்சி.)

சொல்பொரு ளன்றி ஒலிக்குஞ் சுவையுளது.

களத்திடையே தாடகை புக்குவரும் வரவைக் கம்பர் வருணிக்கின்ற பாசுரங்கள், திரைச் சீலையும் அரங்க மேடையும் இல்லாமலே நாடகத்தைச் சொற்களமைப்பாலும் சந்தத் தொழுங்காலும் நிகழ்த்திக் காட்டும் நலம் வாய்ந்தன. உரைக்கும் பொருளை ஓசையே குறிக்கும் வண்ணம் சொற்களுஞ் சீரும் அமைக்குந் திறத்தை ஆங்கிலத்தில் Onomatopeia என்றழைப்பர். அவ்வழகைத் தமிழிலே காணுதற்குத் தக்கவிடம் பல கம்பர் தந்து வைத்துள்ளார். இவ்விடத்தில் தாடகையின் உரமும் உருவத் தோற்றம், அவளணிந்த அணிகளும் அலங்கலும், அவள் வருகின்ற நோக்கம் விரைவு வன்மை, யாவும், ஓதுவோர் கேட்போர் இருவர்த முள்ளத்திலும் உற்றழுந்தி நிற்குமாறு நிகழ்த்துகின்ற விருத்தங்கள் இவை:—

தூரப்பார்வைக்கு "மைவரை நெருப் பெரிய வந்ததென வந்த" தாடகை,

சிலம்புகள்சி லம்பிடைசெ றித்தகழ லோடும்
நிலம்புகமி தித்தனளெ ளித்தகுழி வேலைச்
சலம்புகவ னற்றறுக ணந்தகனு மஞ்சிப்
பிலம்புகநி லக்கிரிகள் பின்றொடர வந்தாள்

[மலைகளையே பருக்கைக் கற்களாகப் போட்டிருந்த சிலம்புகளைக் கட்டியுள்ள கால்களினால் பூமி அழுந்தும்படி ஊன்றி மிதித்தனள். அவ்வாறு அழுத்தியதால் உண்டாகிய குழிகளில், பள்ளத்தில் பாயும் தன்மையுடையதால், கடலின் சலம் மண்டிப்பாயவும், தீயைப் போன்ற அஞ்சாமையுடைய எமனும் அஞ்சிப் பிலத்துள் புகுந்து ஒளித்துக்கொள்ளவும், இவள் வருகின்ற விசையினால் எழுந்த காற்றினால் மலைகளெல்லாம் பறிப்புண்டு, வண்டிக்காலில் பறந்தலையும் துரும்புபோல, இவளைப் பின்தொடர்ந்து உருளவும் வந்தாள்]

இன்னவகைவந்த இவள் பின்னும் நெருங்கியதும் இளைஞரையும் முனிவனையும் நோக்கி,

இறைக்கடைது டித்தபுரு வத்தளெயி றென்னும்
பிறைக்கடைபி றக்கிடம டித்தபில வாயள்
மறைக்கடைய ரக்கிவட வைக்கனலி ரண்டாய்
நிறைக்கடன்மு ளைத்தெனநெ ருப்பெழவி ழித்தாள்.

[கடைதுடித்த புருவத்தளும்,பிறைச்சந்திரன் போன்ற பற்களின் கோடிதோன்ற உதடு அதுக்கிமடித்த பிலம் போன்ற வாயுடையவளும், தர்மத்திற்குப் புறம்பாகியவளும்ஆகிய அந்தஅரக்கி எதிர்ந்து, வடவைக்கனல் கடலிலிருந்து இருகூறாய் முளைத்தெழுந்ததோவென்று சொல்லும்படி கண்களிலிருந்து நெருப்புஎழ விழித்தாள்]

எரிமலை என்னத் தோன்றி நிலக்கிரி தொடர எய்திக் கனலென விழித்த இவள்,

கடங்கலுழ்த டங்களிறு கையொடுகை தெற்றா
வடங்கொளது டங்குமிடை யாண்மறுகி வானோர்
இடங்களுநெ டுந்திசையு மேழுலகு மெங்கும்
அடங்கலுந டுங்கவுரு மஞ்சஎனி யார்த்தாள்.

[மதஜலம் பொழிகின்ற பெரிய யானைகளைத் துதிக்கையோடு துதிக்கையை மாலையாக முடிந்து அணியச் சிறிது துவளும் இடையை உடையளாய், தேவர் லோகமும் எல்லாத் திசைகளும் எழ்உலகும் எங்கும் யாவரும் கலங்கி நடுங்கும்படி இடியும் பயப்பட ஒரு முழக்கம் முழக்கினள்.]

நாற்சீர்களாலான இவ்வடிகள், முதற்சீர் கருவிளங்காயாகவும், கடைச்சீர் தேமாவாகவும், இடை இருசீர் கூவிளங்காயாகவும் நம்முன் ஒத்து நடக்கின்றவாற்றால் தாடகை நடக்குமாறும் தோற்றுவித் தமைகின்றன. வருகையைச் சிறப்பாக வருணிக்கவேண்டிய இடங்களில் கம்பர் பெரும்பான்மை இவ்வகைச் சீர்களாலே தம் விருத்தத்தை அமைக்கின்றார். ஆயினும் வல்லின மெல்லின இடையின எழுத்துக்களைப் பயிலும் நயத்தினால் வருகின்றவர் தன்மைக்கும் கருத்திற்கு மேற்பச் செய்யுளுன் ஒலிக்குறிப்பு மாறித் திகழ்கின்றது. பருத்த உருவத்தளாய்ப் பற்றிய சீற்றத்தோடு தோன்றுகின்ற தாடகையை வருவித்த யாப்புத் தான், மெல்லியல் மாதாகக் காமத்தால் இவ்விராமனின் பாலேயே வந்தெய்தும் சூர்ப்பனகையை வருவிக்கவும் உதவிற்று:—

பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவம னுங்கச்
செஞ்செவிய கஞ்சநிமிர் சீறடிய ளாகி
அஞ்சொலின மஞ்ஞையென வன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்.

பொன்னொழுகு பூவினுறை பூவையெழில் பூவை
பின்னெழிற்கொள் வாளிணைபி றழ்ந்தெளிர் முகத்தா
கன்னியெழிற் கொண்டதுக லைத்தடம ணித்தேர் [ன்
மின்னிழிவ தன்மையிது விண்ணிழிவ தென்ன

கானினுயர் கற்பகமு யிர்த்தகதிர் வல்லி
மேனிநனி பெற்றுவிளை காமநெறி வாசத்
தேனின்மொழி யுற்றினிய செவ்விநனி பெற்றோர்
மானின்விழி பெற்றுமயில் வந்ததென வந்தாள்.

வாரணங்களைத் தொடுத்து வடமாய் அணிந்துவரும் தாடகையின் மலைகளைப் பருக்கைக் கற்களாய்ப் பெய்த நூபுரஞ் சூழ்ந்த கால்கள் மண்ணெளிய மிதித்த வன்மைக் கிலக்காக, வல்லின எழுத்துக்களும், அவைகளுள் வல்லொற்று மிகுந்தும் வந்திருக்கின்றன. இனி, இவ் வல்லொற்றுக்கள் நிற்கின்ற அமைதியை நோக்கினால் அவள் கால்கள் தரையில் ஊன்றிய இடங்கள் தோன்றும். அதுவுமன்றி வெண்டளை எங்கும் பிறழாது நடக்கும் இவ்வடிகள், தாடகை இடை இடையே தங்காது ஒரேபடியாய்வந்த நிலைமையும் ஓசையால் எழுப்பத் தக்கன.மலையென வந்த தாடகையின் வரவிது. மயிலெனவந்த சூர்ப்பனகையின் வரவையும் அதேவித மூன்றுகாய்ச்சீரும் ஒருமாச்சீரும் உடைய அடிகளால் நடத்தினுரேனும் கம்பர் வல்லின எழுத்துக்களை அதிகம் உபயோகிக்காமல் அவள் மெல்லியல் மங்கையாய்ப் பையப்பைய எய்திய தன்மையைப் பயக்குவித்தார். அவள் கால் ஊன்றிய இடங்களாகக் காணப்படும் எழுத்துக்கள் பெரும்பான்மை மெல்லின மாகவேனும் இடையினமாகவேனும் இருக்கக் காண்கின்றோம். செய்யுளின் அடியோடு அடியும் தளைவழுவாது தொடர்வதால் தாடகை இடையொதுங்கி நில்லாது ஒருபடியாக வந்த உணர்ச்சியை அவளைப்பற்றிக் கூறும் பாசுரங்கள் தம் ஓசையால் தருகின்றனவென்று செப்பி

ளும் அதனோடு சூர்ப்பணகையின் வருகையைவருணிக்கின்ற இம்மூன்று பாட்டுக்களை ஒப்பு நோக்குங்கால் முன்னடியின் ஈற்றசையும் வருமடியின் முதலசையும் வெண்டளையாய்ப் பொருந்தாமல் நிற்கின்ற ஓசையே இவள் இடை இடையே நின்றும் இறை இறை ஒதுங்கியும் நடை யொல்கி எய்திய பரிசைத் தெரிவிக்கும். சந்தத்தின் சுவைக்கு ஈடுபட்ட செவிகள் இந்த யாப்பின் திறத்தைச் சொல்லாமலே செவ்விதின் உணரவல்லன.

இராமன்பால் காமத்தால் வந்தவள் தசமுகன் தங்கை. அவன்பால் கோபத்தால் வந்தவள் அத்தசமுகனின் மூதாட்டி. இனி இவ்விராமனுக்கு எதிரே பகையோடு வந்தனான் பரசுராமன். இவன் வருகையை வருணிக்கின்ற கம்பர்,

நிருபர்க்கொரு பழிபற்றிட நிலமன்னவர் குலமும்
கருவற்றிட மழுவாள்கொடு களைகட்டுயிர் கவரா
இருபத்தொரு படிகாலெழு கடலொத்தலை யெறியும்
குருதிக்குரை புனலிற்புக முழுகித்தனி குடைவான்.

எனக் கனிச் சீர்களாலானும் வல்லொற்று அமையும் இடங்களைக்கொண்டு தன் பாசுரத்தையும் பரசுராமனையும் நடத்துகின்றனர்.

சீற்றமும் செற்றமும் வலிந்துந்தவே நெடுங்கால் பாய்ச்சி நடந்த தாடகையையும் பரசுராமனையும் வருவிக்க மூவசைச்சீர்கள் கம்பருக்கு வேண்டியிருந்தன. மையலுற்றழன்று மெல்ல மெல்ல வொல்கிய சூர்பனகையை நடத்தவும் அம்மூவசைச் சீர்களே தக்கவாயின. அடிகளின் இறுதிதோறும் நின்ற இயற்சீர்கள் செலவிற்கு ஓர் அலகிட அமைந்தன போலும். இம்மூவரும் தோன்றிய இடத்தினின்று குறித்த இடம் வருவதற்கு இடையில் ஒரு சிறிது தூரமேனும் கடக்கவேண்டியிருந்ததால் அவர்தம் நடையை அன்னவாறு அவ்வகைச் சீர்களால் செப்பிய ஓசை ஏற்றதாயிற்று. மற்றுச் சனகனது மண்டபத்தில் வீற்றிருந்த காளையின இராமன் கார்முகம் வாங்குவதற்கு எழுந்து நடந்ததைக் கம்பர்,

தோகைய ரின்னன சொல்லிட வல்லோ
ரோகை விளம்பிட வும்ப ருவப்ப
மாக மடங்கலு மால்விடை யும்பொன்
னாகமு நாகமு நாண நடந்தான்.

என அவன் பெருமைக்கும் வயதிற்கும் நோக்கத்திற்கும் இடையில் தூரமில்லாமைக்கும் ஏற்றவாறு வேறுவகையில் பாடி வைத்தனார்.

இன்னவாறெய்தி,

ஆர்த்தவரை நோக்கிநகை செய்தெவரு மஞ்சக்
கூர்த்தநுதி முத்தலைய யிற்கொடிய கூற்றைப்
பார்த்தெயிறு தின்றுபகு வாய்முழைதி றந்தோர்
வார்த்தையுரை செய்தனளி டிக்குமழை யன்னாள்.

[அந்த இடிக்கின்ற மேகத்தை ஒத்த தாடகை, ஆரவாரஞ் செய்து, முனிவன் முதல் மூவரையும் நோக்கி, ஏனமும் இழிவுந்தோன்றச் சிரித்து, கண்டவர் அஞ்சும்படி கூரிய மூன்று அலகுகளுடைய சூல மென்னும் தன் கையிலுள்ள கொடிய எமனைப் பார்த்துப் பற்களைக்கடித்துக் குகைபோல் பிளந்த தன் வாயைத் திறந்து ஒரு வார்த்தை பேசினாள்]

கடக்கரும்வ லத்தெனது காவலிது யாவும்
கெடக்கருவ றுத்தனனி னிச்சுவைகி டக்கும்
விடக்கரிதெ னக்கருதி யோவிதிகொ டுந்தப்
படக்கருதி யோபகர்மின் வந்தபரி சென்றே.

["இது கடப்பதற்கு முடியாத வலியுடைய என்னுடைய காவலிற்கு உட்பட்ட இடம். இங்கு எல்லா வுயிர்களும் அழியும்படி கருவோடறுத்து ஒழித்தேன். இனி எனக்குச் சுவையுள்ள மாமிசம் அரியதாயிற்றே என்னும் பரிவினால் உங்களையே எனக்கு உணவாக அளிக்க வந்தீர்களோ! அல்லது உங்கள் விதியே பிடித்துத் தள்ளிக்கொண்டு வந்ததோ! வந்த செய்தியைச் சொல்லுங்கள்" என்று]

மேகமழை யிற்றுகவி ழித்தனன்பு மூங்கா
மாகவரை யற்றுகவு தைத்தனன்ம தித்தின்
பாகமெனு முற்றெயிற துக்கியயில் பற்று
ஆகமுற வுய்த்தெறிவ னென்றெறி ரழன்றாள்.

[மனம்புழுங்கி, மேகங்கள் பொடிபட்டுதிரும்படி விழித்தனள். ஆகாயத்தையளாவிய மலைகள் உடைந்துருளும்படி உதைத்தனள். சந்திரனது துண்டங்கள் போன்ற தன் கோரதந்தங்களை அதுக்கினளாய்ச் சூலத்தைப்பற்றி 'இவர்களது மார்பிலழுந்த எறிவேன்' என்று கோபத்தால் கொதித்தாள்]

இவ்வகைக் கொல்லவரும் கொடியாளை இராமன் கொல்ல வேண்டுமென்பது முனிவனுக்கு உள்ள கருத்து. முன்னம் முனிவன் உரைத்த மொழிகளாலும் இப்பொழுதவள் முகங்காட்டும் குறிகளாலும் அண்ணல் இராமன் அதனை அறிவான். ஆயினும், இத்தாடகை தன்னைக் கொல்லுந்தொழில் தொடங்கியுளாள் எனினும் நம் குரிசில் அவளது ஆவியைக் குடிக்க வெங்கணை தொடுத்துத் தம்மைக் காத்துக்கொள்ள யாதுஞ்செய்திலன்; மற்றுப் "பெண்ணென மனத்திடை பெருந்தகை நினைந்தான்". அரசிளங்குரிசில் செய்யநேர்ந்த இது அவனுக்குக் கன்னிப்போராகும். முதலில் ஒரு கருமத்தை முயல்கின்ற முயற்சியைக் கன்னிஎன்னும் அடைமொழியால் குறிப்பது மரபு. இராமனுக்கோ இங்குக் 'கன்னிப்போர்' என்பதைப் பெண்ணோடு புரியும் போரென்று பதப்பொருள்படி செய்ய இட்டமில்லை. ஆதலால் தனுவைக்குனித்திலன், பாணந் தொட்டிலன். நின்றனன்.

இராகவனது கருத்து இவ்வாறு தாழ்வதை உணர்ந்த கோசிகன் அவனைத் தெருட்டுமாறு இயம்பிய வாசகங்கள் மூன்றுதிறத்தன. ஒன்று, பிறவியால் பெண்ணேயாயினும் இத்தாடகை வலிமையாலும் உருவத்தாலும் உயிர்கள் நலியச் செய்யும் தொழிலாலும் பெண்மைக்கியன்ற உரிமையை இழந்தனளென்பது. மற்றது, முன் பிருகுவின் மனைவியாய கியாதி என்பவளைத் திருமாலும், குமதி என்பவளை இந்திரனும் கொன்றிருத்தலை மேற்கோள்களாக எடுத்துக் காட்டுவது. எது எவ்வாறிருப்பினும் தீச்செயல் செய்வோர் எப்பாலராயினும் அவரை ஒறுத்தலே முறையென்பது மூன்றாவது. இவை மூன்றும் விச்வாமித்திரனது வாசகமாக வருகின்ற பத்துப் பாசுரங்களுள் விரவி இருக்கின்றன. தாடகை புரியும் தீமையினளவைப் புகல்கின்றான்; 'தீதி இது காண்' என்று இராமனுக்கு எடுத்து ஓதுகின்றான்; பெண்ணென்று இவளை எண்ணிப் பரிகின்ற இராமனையுஞ் சிறிது பரிகசிக்கின்றான் விச்வாமித்திரன்:—

கறங்கி டத்திகி ரிப்படி காத்தவர்
பிறங்க டைப்பெரி யோய்பெரி யோரொடும்
மறங்கொ டித்தரை மன்னுயிர் மாய்த்துநின்
றறங்கெ டுத்தவட் காண்மையும் வேண்டுமோ.

[ஆக்ஞாசக்கிரம் எங்கும் சுழலப் பூமியைக் காத்த வேந்தர்கள் வழித்தோன்றலாய இராமனே, பெரியவர்களோடு விரோதங்கொண்டு இத்தரையிலுள்ள உயிர்களையெல்லாம் கொன்று தருமத்தைக் கெடுத்த இவளைக் கொல்வதென்றால் அவளுக்கு ஆண்மையும் வேண்டுமோ]

என்று கோசிகன் குறித்து, இவள் பெண்ணென்றும் ஆணென்றும் கருதற்கொத்தவளல்லள். கூற்றேயிவள்; அக்கூற்றிலும் புதியதொரு கூற்றாவள் என,

சாற்று நாளற்ற தெண்ணித் தருமம் பார்த்
தேற்றும் விண்ணென்ப தன்றியி வளைப்போல்
நாற்றக் கேட்டலுந் தின்ன நயப்பதோர்
கூற்றுண் டோசொலாய் கூற்றுழ் வேலினாய்.

[எமனொத்த வேலையுடையவனே, விதித்துள ஆயுள் முடிந்ததை எண்ணி உயிர்கள் செய்துள பாபபுண்ணியங்களையும் கருதி மேலுலகத்தில் கொண்டு செல்லும் கூற்றம் என்பது யாவருமறிவர். ஆனால் இவளைப்போல் நாற்றம் கேட்டதும் தின்னவருகின்ற எமன் ஒன்று உண்டோ, சொல்] என்று வினவுகின்றான்.

சொல்லும் விரைவாலும் மனத்தின் தாபத்தாலும் நாவழுவிப் 'பேரைக் கேட்டதும், நாற்றம்பட்டதும்' என்னும் இருபொருளையும் ஒன்றாய்க்கலந்து 'நாற்றங் கேட்டதும்' என்று முனிவன் கூட்டிவிட்டான். அதுவுமன்றித் தான் எவ்வளவுகூறியும் இராமன் அச்சொற்களுக்கு இணங்குங் குறியொன்றும் காட்டாமல் சும்மா நிற்பது விச்வாமித்திரனுக்குச் சலிப்பு விளைத்திருக்கும். அச்சலிப்பால் உழன்ற மனதைக்கொண்டு தாடகையின் கொடுமைக்கு இதன்மேல் எல்லை இல்லை யென்றபடி கற்பிக்கவேண்டிய நிலையில், 'நாருடைய நாற்றம் பட்டாலும் தின்ன நயப்பவள்' என்று சொல்வதற்கு 'நாற்றம்' என்று தொடங்கியவுடன், நாற்றம்பட்டுத் தின்ன நயப்பதனினும் நரரென்னும் நாமம் கேட்டதும் நயப்பதே இக்கூற்றின் புதுமையைச் சிறப்பிக்கும் என்னும் நினைவு தோன்றச் சடுதியில் 'கேட்டலும்' என்னும் சொல்லை விச்வாமித்திரன் தொடுத்துவிட்டதால் இவ்வாறு நேர்திருத்தல் வேண்டும்.

மன்னும் பல்லுயிர் வாரித்தன் வாய்ப்பெய்து
தின்னும் புன்மையிற் றீமையெ தோவைய
பின்னுந் தாழ்குழற் பேதைமைப் பெண்ணிவள்
என்னுந் தன்மை யெளிமையின் பாலதே.

[எல்லா உயிர்களையும் வாரித்தன் வாயிலிட்டுத் தின்பதைக் காட்டிலும், ஐய, புன்மை வேறு எது உளது? இன்னமுஞ் இவளை நீ தாழ்ந்த கூந்தலும் மடமையும் உடைய பெண்ணென்று இருப்பாயாயின், அது அறியாமையே அன்றி வேறன்று. உன்வல்லமையையும் அயிர்த்தற்கு இடமுண்டாகும்]

யாது கூறினுலென்ன? இராமன் மனதில் அவன் முதலிற்கொண்ட எண்ணமே நிலகின்றது. தாடகையின்பால் கோபமேனும் அவளைக் கடிய வேண்டும் என்னும் கருத்தேனும் பிறந்தகுறி இராமனது முகத்தில் விச்வாமித்திரன் கண்டிலன். இந்நிலையில் அவன் இராமனை வைவதற்கும் இல்லை; வாளாயிருப்பதற்கும் இல்லை. மற்று, என்செய்வான்.

T. N. சேஷாசலம்.

தமிழ் நாடெங்கணும் புகழ்வாய்ந்த
எங்கள் நிகரிலாத
" ஆநந்த குணபோதினி "
ஆடி மாதமுதல் ஆங்கில மாத ஸஞ்சிகைகளை
யொப்ப நவீன நாகரிக உதவுடன்

அமிர்த குணபோதினி

என்னும் புதிய பெயர் தாங்கிப் புதுவிதமாக 3-வது ஆண்டு]வெளிவருகின்றது.[3-வது ஆண்டு பிரபல ஆசிரியர் ஸ்ரீமான் S.G. இராமாநுஜலு நாயுடு அவர்களால் இப்பத்திரிகை எழுதப்பட்டு வருகிறது.

அநுபவ ஞானபோதனையில் இதுபோன்ற முதன்மையான மாத ஸஞ்சிகை வேறில்லை. கௌரவமான விகடம் இப்பத்திரிகை யொன்றில் தான் காணலாம். இதுவே விவேகசாரம், இதுவே ஜநவிநோதினி, இதுவே விசித்திர விலாஸம், இதுவே விகடப் பொக்கிஷம், இதுவே அநுபவ ஞானவாரிதி, இதுவே அற்புத ஞானபோதகம், இதுவே ஆச்சரிய சிந்தாமணி, இதுவே ஆநந்த தீபம் என்று எண்ணலாம். பதினாயிரம் சந்தாதாரர்களை உடையது. இன்னும் பல்லாயிரம் சந்தாதாரர்கள் தேவை. பார்க்க அழகாய், படிக்க இனிமையாய், நினைக்க மனோகரமாயிருப்பது எது? எங்கள் "அமிர்தகுணபோதினி"யே. 56-பக்கங்களுடனும் ஒரேரூபாயைச் சந்தாவாகக் கொண்டுள்ள உயரிய மாதப் பத்திரிகை தமிழ் நாட்டில் இது ஒன்றேதான். இதற்குச் சமமான தமிழ் மாத பத்திரிகை எதுவுமே கிடையாது. இது யாவரும் அறிந்த விஷயமே. வருஷ சந்தாரூபாய் ஒன்றே. வெளி நாடு ரூ. 1 4 0 மாதிரி காப்பி இனும்.

தி. இராஜகோபால் முதலியார்,
அமிர்த குணபோதினி ஆபீஸ்,
302, தங்கசாலை வீதி, சென்னை.

உ

வியாஸங்கள்.

வியாஸங்கள்! வியாஸங்கள்!!

வியாஸங்கள் மிக எளிதில் அறிந்து அதன்படி நடந்து நன்மையடையக் கூடியவிதமாக எழுதப்பட்டுள்ளன.

கீழ்கண்ட வியாஸங்கள் ஒவ்வொரு தமிழரும் வாங்கி வாசித்துப் பயனடையக் கூடியனவாகும். நமது முன்னோர்களுடைய உபதேசங்கள் பலவற்றை நம்மில் பலர் அறியாமலிருக்கிறார்கள். காரணம், அவையாவும் செய்யுளாக இருப்பதினால். இந்த வியாஸங்கள் அச்செய்யுட்களையே பெரும்பாலும் தழுவி வசனமாக எழுதப்பட்டிருக்கின்றன.

	ரூ.	அ.		ரூ.	அ.
அன்பு	0	1	பொதுமதம்	0	2
பலவகை மனிதர்	0	1	ஆருதாரம்	0	2
தவம்	0	1	சந்தேகம்	0	2
பொறுமை	0	1	கற்பு	0	3
இருவினை	0	2	அஸ்தபூஷணம்	0	4
இல்லறம்	0	2	பதினாறுபேறு	0	4
ஆலயவழிபாடு	0	2	என் தந்தையார்	0	6

மேல்கண்ட பதினான்கு புத்தகங்களையும்
ஒரே தடவையில் வாங்குபவர்களுக்கு
ரூபாய் இரண்டேக்குக் கொடுக்கப்படும்.
தபால் சார்ஜ் இனும்.
இன்றே எழுதுங்கள்!
நவீனகதா புத்தகசாலை,
மங்கமாரி வீதி, இரங்கூன்.

கம்பராமாயணம்

பாலகாண்டம்

T.N. சேஷாசல ஐயர், B.A.,B.L., பதிப்பு.

சிற்றடக்கமாய் நல்ல கட்டிடத்தில் புதிய முறையில் பொருள்விளக்கி இப்பதிப்புப் பதிப்பிக்கப் பெற்றுளது. செய்யுள்களுக்குப் பதவுரை எழுதிவிட்டால் படிப்பவர் தம் முயற்சியால் பொருள்தேடும் பழக்கம் பெறாது போய்விடுவர். ஆதலால் இப்பதிப்பாசிரியர் பதம் பிரித்துத் தொடர்விரித்து அன்வயப் படுத்தி அவாய் நிலைகளை வருவித்து, அரும் பதங்களுக்கு அர்த்தம்கூறி விசேஷக் குறிப்புக் களையுஞ் சேர்த்துக் கூடியவரையில் கம்ப ருடைய வார்த்தைகளாலேயே அவர் செய்யு ளின் கருத்தை விளக்குகின்றார்.

இப்பதிப்பில் பற்பல செய்யுள்களுக்கு இவ் வாசிரியர் காட்டும் பொருள் புதியன. இவர் செப்பும் உரையாவும் கவியின் இருதயத்தைத் தழுவி எழுதியன.

விலை ரூ. 3 0 0

(வி. பி. சார்ஜ் வேறு)

மானேஜர்,

"கலா நிலயம்"

11, வெள்ளாளர் தெரு,

புரசைபாக்கம்,

சென்னை.

ஏமாங்கதத்

திளவரசன்

T. N. சேஷாசலம், B.A.B.L., இயற்றியது.

இலக்கிய நலங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதல் காதை. அன்பினது வன்மை யும், வாய்மையின் தூய்மையும், புன்கவி புகுந்துசெய்யும் துன்மதிச் சூழ்ச்சியும் கலந்து இக்கதையினை நடத்தி வைக்கின்றன.

தமிழின் உரைநடைக்கும் ஓர் தனிச்சுவை உளதென்பதை இந்நூலினுள் காணலாம். ஆங்கிலக் கதைவல்ல ஆசிரியர்களின் நூலி னுள் தோன்றும் சம்பாஷணை நயத்தைத் தமி ழில் தன்னுள் ஏற்ற நூல் இதுபோன் றிருப் பன வெகு சில.

விலை ரூ. 1 0 0

(வி. பி சார்ஜ் வேறு.)

மானேஜர்,

"கலா நிலயம்"

11, வெள்ளாளர் தெரு,

புரசைவாக்கம்,

சென்னை.

KAMBAN'S KOSALA
or
A Poet's Plea for Culture

by T. N. Seshachalam B.A., B.L., In English

A Succinct exposition of the Poetic Art and the Political Philosophy of Kambar as can be gleaned out of the First Four Padalams of Balakandam.

With a Foreword by Dr. James H. COUSINS

This book is an excellant commentry on the great truth that the art of literature is something of an abstraction, an idealisation that purposely leaves the realities aside. The scope and the purpose of the book will be clear from the author's preface which is quoted below :—

THIS little book is ambitious. Taken by itself it hopes to interpret an ancient seer-poet's judgment on the conflict that is now rampant on all sides between conservative harangues and socialistic utopias. But its main purpose is to introduce to the world of thought and letters, the great Kamba Ramayanam, an extraordinary work of art and book on life, but which would without elucidation be perplexing to all the western methods of analysis and reasoning.

About Kamban, as with many other great personalities, much is not known beyond his works. He lived nearly ten centuries ago and was accepted as the greatest among the poets of his time. The Ramayana which he composed has not been surpassed by anything in the epic literature of the Tamil land. The magnificient classics of the earlier academicians were all his heritage, and his imagination and native genius were considerably assisted by his scholarship. The hoary literatures and philosophy of India alone could have cradled such a genuis, a genius highly poetical, pre-eminently moral, transcendental by the inspired revelations of its seer's ecstasy and best formed to clarify the elemental Truths of life here and hereafter.

Kamban professes Valmiki's Sanskrit epic of the same name as the original for his Ramayanam. But this is almost akin to Shakespeare's indebtedness to Boccacio or Plutarch. Kamban's Ramayanam is the embodiment of a mind, the most creative that ever engaged in the exact portrayal of the details of actual existence, in the dazzling speculations of life among the gods and in the profound complications of passions, human and superhuman. The eternal story of Rama runs in crystal stream of fortytwo thousand three hundred and forty eight lines of sublime grandeur glorifying the Creator and reflecting His creation.

With the Kural and the Gita, the Ramayanam is the most ennobling book that has ever been written. Like many other good things, however, it is not generally understood and made sufficient part of one's being. The realization of the conception of life, individual and social, that gathers and takes shape in one's mind as this wonderful epic is read and re-read ought to recast the destiny of mankind. Price Re. 1-4-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "KALANILAYAM" 11, Vellala St., Purasawalkum, Madras.

வர்த்தமானம்.

டாக்டர் ஆண்டிரிவீஸ் காலஞ் சென்றார்:—எல்லா நாட்டு நியாயஸ்தல உதவித்தலைவரான(Vice President of International Court of Justice) டாக்டர் ஆண்டிரிவீஸ் என்பார் சில தினங்களுக்கு முன் காலஞ் சென்றார் என்று ஆண்டுவர்ப் என்னுமிடத்திலிருந்து வந்த விசேஷச் செய்தி கூறுகிறது.

***

காங்கிரஸ் வாதி கைது செய்யப்பட்டார்:—பஞ்சாப் காங்கிரஸ்சபையின் பிரசார இலாகா காரியதரிசியான ஸ்ரீமான் கோபாலசிங் என்பார் லக்னோவிலிருந்து பஞ்சாப்பிற்குத் திரும்புகையில் போலீசாரால் கைது செய்யப்பட்டார் என்று ஜலந்தர் என்னுமிடமிருந்துவந்த செய்தி கூறுகிறது. இவர் சிலகாலத்திற்கு முன் ராஜத்துரோகமான பிரசங்கம் செய்தார் என்பதே குற்றமாம்.

***

கெல்லாக்கின் முயற்சி:-யுத்தத்தைநீக்கும்முயற்சியில் தலைப்பட்டுக் கெல்லாக்குசெய்த ஏற்பாட்டை இதுவரை 39 நாட்டார் ஏற்றுள்ளனர் என்று ஆகஸ்ட் 31ந் தேதி வந்த செய்தி கூறுகிறது. யூகோஸ்லேவியா, ருமேனியா நாட்டாரும், திட்டத்தில் கையெழுத்திட்டுள்ளனர் என்று தெரிகிறது. ருஷியா தேசத்தார் பொதுவாய் இவ்வேற்பாட்டை அங்கீகரிப்பதாகவும் ஆனால் படையையும்,ஆயுதங்களையும் போதுமானபடி குறைக்கஏற்பாடுகள் செய்யப்படவில்லை என்றும், ஏகாதிபத்தியத்திற்குட்படாத சில விடங்களில் பிரிட்டிஷார் செய்யும் காரியங்களை இத்திட்டம் கட்டுப்படுத்துவதாயில்லை என்றும் தேவையான திருத்தங்கள் இத்திட்டத்தில் செய்யப்படுமாயின் சோவியத்து அரசாங்கத்தார் இதை ஏற்பர் என்றும் கூறுவதாகத் தெரிகிறது.

***

அகில இந்திய அரசியல் மஹாநாடு:—ஆகஸ்டு மாதம் 29-ந் தேதியன்று டாக்டர் அன்ஸாரியின் தலைமையின்கீழ் டில்லியில் கூடிற்று. இந்தியாவிலுள்ள எல்லாக்கட்சியினரும் மஹாநாட்டிற்கு வந்திருந்தனர். ஸ்ரீமதி அன்னிபெஸண்டு, ஸர். ஸி. பி. இராமஸ்வாமி ஐயர்,சேலம் விஜயராகவாச்சாரியார், டாக்டர் சாப்ரு,ஸர் சேதல்வாட், இந்து மஹாசபையினர், ஜின்னு கட்சியினர், ஸ்ரீலஜபதிராய், மாளவியா, சோஷலிஸ்டு கட்சியினர், முகமதபாத் ராஜா, ஹஸரத்மோஹினி அலிசகோதரர்கள் முதலியனோர் கூட்டத்தில் விஜயமாயிருந்தனர்.

கூட்டத்தின்முன் ஸ்ரீமான் மோட்டிலால் நேரு தயார் செய்த சுயராஜ்யத்திட்டம் யோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. நேருவின் குமாரரும் மற்றும் சிலரும் பூர்ண விடுதலை வேண்டுமெனக் கூறினர் என்றாலும் கடைசியில் நேருவின் திட்டத்தைப் பூர்ண விடுதலைக்கு அடிப்படையெனக் கொள்வதாகக் கூறி நேருவின் திட்டத்தை ஏற்றனர்.

இது ஒருவாறு முடிய, இந்து மஹாசபையினருக்கும், கிலாபத்து கட்சியினருக்கும் சிந்துப்பிரிவினை விஷயமான அபிப்பிராயபேதம், நாட்டின் ஒற்றுமைக்கு விரோதமாய் முடியுமோவென மஹாநாட்டார் கொண்ட கவலையும் தீர, முடிவொன்று இருதாத்தினருக்குள்ளும் ஏற்பட மஹாநாட்டார் மகிழ்வெய்தி இந்து மஹாசபைப் பிரதிநிதிகளை வரவேற்றனர். மாளவியாபோன்ற மிதவாதிகளும்,டாக்டர் சாப்ருவும் அவரைச்சேர்ந்தாரும், அன்னிபெஸண்டு அம்மையாரும் ஏகமனத்தினராய் குடியேற்ற நாடுகள் பெற்றுள்ளதைப்போன்ற உரிமை என்னும் நோக்கத்தைக்கொண்ட நேருவின் திட்டத்தைச் சிறு திருத்தங்களுடன் ஏற்றனர் என்று தெரிகிறது.

கடைசியில் மஹாநாடு முடிவாகக் கொண்டுவந்த தீர்மானம் வருமாறு:—

இந்த அகில இந்திய மஹாநாடு மொத்தத்தில் ஸ்ரீமான் மோட்டிலால் நேரு அவர்களது திட்டத்தை ஏற்றுக் கொள்கிறது.

மீண்டும்நேரு கமிட்டியார்,இன்னும் சிலஜனப்பிரதிநிதிகளுடனும், அன்னிபெஸண்டம்மையாருடனும் கலந்து, இப்பொழுது மஹாநாட்டார் செய்த முடிவிற்கு விரோதமாய் ஒன்றையும் செய்யாது, தக்க அனுபவசாலிகளைக் கொண்டு சுயராஜ்ய மசோதாவாகத் தயாரிக்கவேண்டுமென்று மாஹாநாடு தீர்மானிக்கின்றது. அவ்வாறு செய்யப்பட்ட மசோதா எல்லாக்கட்சியின் பிரதிநிதிகளின்முன் அவர்களது அபிப்பிராயத்திற்கு விடப்பட வேண்டும்.

பஞ்சாப் மஹமதியர்கள் பிரத்தியேகப் பிரதிநிதித்வத்தை வற்புறுத்தாது விட்டது ஹிந்து முகமதிய ஒற்றுமையை உண்டுபண்ணியுள்ளது. நாட்டின்நலத்தை நாடி இம்முடிவு செய்த இந்து முகமதியத் தலைவர்களது தேசபக்தியை இம்மஹாநாடு கொண்டாடுகிறது.

இம்முடிவைப்பற்றி ஸ்ரீமோட்டிலால் நேரு பேசுகையில் கூறியதாவது:—

"இம்மஹாநாட்டின் திருப்திகரமான முடிவிற்கு முகமதாபாத் ராஜாவின் முயற்சிதான் காரணம். சில நண்பர்கள் முழுவிடுதலை என்றனர். நான் வேண்டுவதும் முழு விடுதலையேதான். சமூகப்போரிலும் மதப்போரிலும் மனதுசெலுத்திப் பிளவுவளர்த்து நம்மில்பலர் வருகையில் நாட்டின் நிலையை நன்கு ஆராயாது வாயால் பூர்ண விடுதலை பேசுவதில் என்னபயன். இது முழுவிடுதலைக்கு அடிப்படையேயாகும்".

ஸ்ரீமாளவியா, பெஸண்டு, ஸர். ஸி. பி. இராமஸ்வாமி ஐயர் முதலானோரும் முடிவை ஆதரித்துப் பேசினர். தலைவர் முடிவுரையுடன் மஹாநாடு கலைந்தது.

***

டாக்டர் பெஸண்டு:—காசி இந்து கலாசாலையினர், டாக்டர் பெஸண்டை நவம்பர் மாதம் 13-ந்தேதி நடக்கப்போகும்,பட்டமளிப்புக் கூட்டத்தில் (Convocation) பேசுமாறு கேட்டுக் கொள்ள அவ்வாறு செய்ய அவரும் ஏற்றுக்கொண்டுளார் என்று தெரிகிறது.

***

புதியசட்டம்:—இந்திய அரசாங்கத்திற்கும் அயல் நாடுகளுக்கும் விரோதம் உண்டாகும்படி பேசவோ, எழுதவோ, பிரசுரிக்கவோ செய்பவர்களைத் தண்டிக்க வேண்டிப் புதிய சட்டம் ஒன்று செய்யும் விஷயம் இந்தியச் சட்ட சபைக்கு வரும் என்று தெரிகிறது. இது இந்திய பீனல் கோட்டில் 505-வது செக்ஷனின் புதிய பகுதியாகும் என்று தெரிகிறது.

***

மாணவரும் அரசியலும்:—இம்மாதம் 3 ந்தேதியன்று கல்கத்தா வாலிப கிறிஸ்தவ சங்கக் கூட்டத்தில் நடந்த மாணவர் கூட்டமொன்றில் அக்கிராசனம் வகித்த வங்காள அட்வகேட் ஜெனராலான ஸர். பி. ஸி. மித்திரா பேசியதாவது:—இதுபோது மாணவர்கள் அரசியல் இயக்கங்களில் கலந்து வருகின்றனர். அரசியல் மாணவர்களின் கல்வி முதலிய பலதுறை வளர்ச்சிக்கு ஏற்றதல்ல. துவக்கமுதல் சிறிது ருசிகரமானதான அரசியல் மாணவர் வாழ்வைக்கெடுத்துக் கல்வி முன்னேற்றத்திற்கு இடையூறாய் அமைகிறது. எனவே கல்லூரியில் இருக்கும் காலம்வரையாவது பொது இயக்கங்களில் மாணவர் கலவாதிருத்தல் அவசியமாகும்.

189019

THOUGHTS FOR STATESMEN

from

MONTESQUIEU AND TOCQUEVILLE

IN ENGLISH

by

T. N. SESHACHALAM B.A., B.L.

WITH A FOREWORD

by

Sriman S. Sreenivasa Aiyangar

The purpose and Scope of the book is well set out in the opening paragraph of the author's preface which is quoted below:—

The course of history may vary in some details with different countries and at different periods, but human nature, the fundamental spring of all actions remains constant and shows a remarkable uniformity throughout. A proper understanding of that phase of human nature which specially manifests itself in the carrying on of a corporate existence should be an invaluable equipment to those who are engaged in the making or the maintaining of a nation. Philosophical historians have attempted to find the common principles and emotions which, operating upon men of every climate and degree of civilization, produce certain results. With their keen powers of observation and insight they gather a comprehensive view of our society, institutions and destiny. An attempt is made to collect in this book some of the very important observations made and far-reaching results arrived at by two notable French writers of eminence and perhaps not very well known to an ordinary English reader.

It is needless to add that the selection of these passages has been made with an eye to their applicability to the present conditions in India.

Price Re. 1-8-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "*KALANILAYAM*"
11, Vellala Street, Purasawalkum, Madras.

A MOMENTOUS BOOK

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM

OF

CEYLON CIVIL SERVICE

WITH AN APPRECIATIVE

FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particulary of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit,

Price Rs. 5-8-0. (V.P. Charges extra)

MANAGER:—

"KALANILAYAM"

11, VELLALA STREET,

Purasawalkam, MADRAS.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)